பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள் – 14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–12 | 26–06–2004 | சனிக்கிழமை | ஓசை –129

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
077-6059672
(தி-9598)

# கிழக்கின் தற்போதைய நிலைமை கடினம் மிக்கதொன்றாகவே உள்ளது!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர்

(வவுனியா)

**கிழக்கின் தற்போதைய நிலைமை இலகுவானதாக இல்லை. அம்பாறை- மட்டக்களப்பு மாவட்டங்களில் அரசுடனான அனைத்துச் சந்திப்புக்களையும் புலிகள் நிறுத்திக்கொண்டதனால் அங்கு நிலைமை கடினமானதாகவே உள்ளது என இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்தார்.**

வவுனியாவில் உள்ள போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்த ஹொக்லண்ட் கருணா தொடர்பாக அண்மையில் ஏற்பட்டுள்ள நிலைமை கடுமையானது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவிற்கு சிறிலங்கா இராணுவத்தினர் உதவினார்கள் என்பதற்கு எந்த வித ஆதாரமும் இல்லையெனத் தெரிவித்தார்.

கருணா தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புப் குழுவின் நிலைப்பாடு என்ன என செய்தியாளர்கள் கேட்ட போதே இவ்வாறு தெரிவித்த அவர், கருணாவிற்கு இராணுவத்தினர் உதவினார்கள் என்பதற்கான எந்த ஆதாரத்தையும் தாங்கள் காணவில்லைஎனவும், அது குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனவும தெரிவித்த அவர், விடுதலைப்புலிகளும் அதற்கு உறுதியான ஆதாரங்களை முன்வைக்கவில்லை யெனவும் இதுதான் தங்களின் நிலைப்பாடெனவும் தெரிவித்தார். இதேவேளை அரசும் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து (14பக்கம் பார்க்க)

## பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போதே கருணாவை வெளியேற்றக் கோரினோம்

### அலிசாஹிர் மௌலானா கூற்றுக்கு புலிகள் பதில்

தமிழீழ விடுதலைப்புலிகளால் கருணாவிற்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலப்பகுதிலேயே அலிசாஹிர் மௌலானாவை கருணா வெளியேற உதவுமாறு கேட்டிருந்ததாகவும் ஏப்பிரலில் தாக்குதல் ஆரம்பித்த பின்னா தாம் அவ்வாறு கோரவில்லையெனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கருணாவை வெளியேற்ற உதவுமாறு புலிகள் தம்முடன் தொடர்பு கொண்டதாகவும் அதன் அடிப்படையிலேயே தாம் கருணாவிற்கு உதவியதாகவும் அலிசாஹிர் மௌலானா தெரிவித்தமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே புலிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்பிரல் நடுப்பகுதியில் கிழக்கை கருணாவிடம் இருந்து மீட்கும் நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் அலிசாஹிர் மௌலானா இதில் தலையிடவேண்டுமென்று தாம் விரும்பவில்லை எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அலிசாஹிர் மௌலானா கருணாவை கொழும்பிற்குக் கூட்டிச்சென்ற மூன்றாவது நாள் தாம் அதனை கண்டுபிடித்த (14பக்கம் பார்க்க)

### அமெரிக்கக் கப்பலை தயாசந்தகிரி கையேற்பு

அமெரிக்காவினால் இலங்கையின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள கரேஜஸ் கப்பலை கடற்படை தளபதி தயாசந்தகிரி நேற்று வோஷிங்டனில் (14பக்கம் பார்க்க)

## கருணாதரப்பிலுள்ள எவருக்கும் விசா வழங்கக் கோரவில்லை

### மிலிந்தமொறகொட தெரிவிப்பு

நான் கருணாவின் குடும்பத்திற்கோ அல்லது கருணாவிற்கோ அல்லது வேறு எந்த நபருக்கோ விஸா வழங்குமாறு யாரையும் வலியுறுத்தவில்லையென மிலிந்தமொறகொட அறிக்கை விடுத்துள்ளார். மங்கள சமரவீர அமச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இடம் பெறுகின்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் குற்றம் சாட்டியுள்ளது போன்று தான் நடந்துகொள்ள வில்லையெனத் தெரிவித்துள்ளார். அமைச்சரின் கூற்றிற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## டக்ளஸ் தேவானந்தாவின் பதவி பறிக்கப்படலாம்

### தென்பகுதியில் அரசியல் வட்டாரங்கள் ஊகம்

ஈ.பி.டி.பி குழுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சர் பதவி பறிக்கப்படலாம் எனகொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுவதாக இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

4500கோடி டொலர்கள் நிதியுதவி பெறுவதற்காக பேச்சுவார்த்தைகளைத் தொடரவேண்டிய கட்டத்திலுள்ள அரசாங்கம் தாங்கள் கருணா விடயத்தில் சம்பந்தப்படவில்லை எனக்காட்ட டக்ளஸ் தேவானந்தாவை பதவிவிலக வற்புறுத்தலாம் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(14பக்கம் பார்க்க)

## பட்டிருப்பு அரசியல்துறை அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகம் ஒன்றின்மீது கைக்குண்டுவீச்சு நடத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கல்முனை வீதிகளுவாஞ்சிக் குடியில் உள்ள பட்டிருப்புக் கோட்டத்திற்கான அரசியல் துறை அலுவலகம் மீதே நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தக் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இதேவேளை இக்கைக் குண்டு வீச்சு நடைபெற்றபோது அந்த அலுவலகத்தில் ஐந்து போராளிகள் இருந்ததாகவும்,குண்டு அலுவலகத் (14பக்கம் பார்க்க)

## வவு.வளாக மாணவர் போராட்டம் தொடர்கிறது துணைவேந்தர் வருகை தந்தும் பயனில்லை

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் வந்து சமரசம் செய்த போதிலும் இரவு பத்துமணி வரை எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படவில்லை.

துணைவேந்தர் நேற்று வருகைதந்து மாலை 5.30 மணிக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள வளாகத்தில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி,இரவு 10.00 மணி வரை இது தொடர்ந்தது. எனினும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை. முன்னதாக நேற்று அனைத்து மாணவர்களும் நிர்வாக கட்டடத்திற்கு (14பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற அமர்வுக்கான நாட்களை அதிகரிக்க எதிர்க்கட்சிகள் கோரல்

### சுயாதீனஊடக, மதமாற்றப்பிரேரணைகள் கொண்டுவரவும் முடிவு

(கொழும்பு)

சனநாயக முறையை பாராளுமன்றத்தில் நிலைநாட்ட வேண்டும், அதேநேரம் பாராளுமன்ற அமர்வுகளுக்கான தினங்களை அதிகரிக்க வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் இன்று மகஜர் ஒன்றை கையளித்துள்ளன. அதேநேரம் எதிர்க்கட்சிகள் இணைந்து சுயாதீன ஊடக பிரேரணை மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் கட்டாய மதமாற்ற தடைச் சட்ட பிரேரணை என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானம் எடுத்துள்ளன. பாராளுமன்ற அமர்வு கூட்டப்பட்டவுடன் இந்தப் பிரேரணைகள் சமர்ப்பிக்கபடவுள்ளன.

(14பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

யுனிசெவ் வெண்புறா – வன்னி

## வரிவிளம்பரம்

### வெளிவந்து விட்டது

வெளிவந்துவிட்டது A/L Phyics Volume-02 (Mechanis) ஆசிரியர்: திரு.எஸ். தவபாலன் எல்லாபுத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (4748)

### வழிகாட்டல் வகுப்பு

ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்.2004 காலம். 27/06/2004 ஞாயிறு காலை 9.00 மணி. இடம்: கிளி/ கிளிநொச்சி ம.வி. செயலாளர் பேரிகை சமூக கால இலக்கிய பங்காளிகள் அமைப்பு கிளிநொச்சி, (4746)

### இடமாற்றம்

கோமான் தையலகம் யாழ் சாலை கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கி வந்த கோமான் தையலகம் 25-06-2004ஆம் (வெள்ளிக்கிழமை) திகதி தொடக்கம் கச்சேரி வீதி கிளிநொச்சி (தமிழீழ வைப்பகம் பின்புறமாக) என்னும் முகவரியில் புதிய கட்டடத்தில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம். (4744)

### வகுப்பு ஆரம்பம்

கேம்பிறிஜ் கல்லூரி உதயநகர் கிளிநொச்சி பௌதிகவியல் 2005,2006 A/L வெள்ளி,சனி ஆசிரியர்: திரு.எஸ். தவபாலன். (4748)

# இந்தியாவிலிருந்து படகில் வந்த 26 அகதிகளுக்கு விளக்கமறியல்

இந்தியாவிலஇருந்து கடந்தபுதன்கிழமை 26 அகதிகளைப் படகில் ஏற்றிவந்த படகோட்டிகள் மூவரையும் அதில்வந்த 26 அகதிகளையும் மன்னார் நீதிபதி எம்.எம். அப்துல்லா எதிர்வரும் 1 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார் இவர் களைச்சிறிலங்காக் கடற்படையினர் தலை மன்னார் கடற்கரையில் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். இந்த 26 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

# பெண்கள் உளவள மேம்பாடு குறித்து மன்னாரில் கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் பேசாலையில் உள்ள புனித வெற்றி நாயகி ஆலய ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்றுக்காலை 9.00மணியளவில் மன்னார் மாவட்டப் பெண்களின் உளவளமேம்பாட்டுக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இதற்கு மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை அவர்கள் தலைமை தாங்கினார். மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கில் விரிவுரைகளை அருட்தந்தையர்கள் வின்சன் பற்றிக், வின்சன்யோசப் ஆகியோரும் கொழும்பிலிருந்து வந்த பெண்கள் உளவள அமைப்புகளைச் சேர்ந்தோரும் உரையாற்றினர்.

இங்கு 100இற்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளையும் சந்தேகங்களையும் அவர்களிடம் கூறினார்கள். (மி)

# "இலங்கையில் ஆசிரியரின் உரிமைகள்" கிளிநொச்சியில் கருத்தரங்கு

"இலங்கையில் ஆசிரியரின் உரிமைகள்" என்ற தலைப்பில் எட்யுக்கேசன் இன்ரநசனல்-பிரட்ரிக் ஈபேர்ட் மன்றம். இலங்கைத் தமிழர் சங்கம் ஆகியன இணைந்து நடாத்தும் ஆசிரியர்களுக்கான இருநாள் கருத்தரங்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயம், முல்லைத்தீவுக் கல்விவலயம், கிளிநொச்சி கல்விவலயம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்ளலாம் என இலங்கை தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறிவித்துள்ளார்.

## 05ஆம் ஆண்டு நினைவலைகள்

ஜனனம் 20 - 04 - 1972



வீரமரணம் 26 - 06 - 1999

### மேஜர் யாழிசை

பரராஜசிங்கம் – மங்கயற்கரசி

கரவெட்டி யாழ்.

கண்ணுக்குள்ளிருக்கும் மணியாய்
மண்ணதனைக் காத்து
அண்ணனவன் தானைப் புலியாய் - தமிழர்
எண்ணமெல்லாம் நிறைந்திருக்கும்
எம்மினிய உறவே! சாந்திபெறுக
உம் ஆத்மா என்றென்றும்....

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

(4747) குடும்பத்தினர்.

# யாழ். மண்ணில் மாபெரும் கண்டிய நடனம்

இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ். மண்ணில் உலகப்புகழ் வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித்தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடைபெறவுள்ளது. இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக,

01. மங்கள வாத்தியத்துடன் நடனம்
02. பூஜா நடனம்
03. மயில் நடனம்
04. உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்
05. முகமூடி நடனம்
06. யக்க நடனம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்
07. கஜகாவண்ண நடனம்
08. ரபான் நடனம்
09. கோலாட்டம்
10. தமிழ் நடனப்பாடலுக்கு அபிநயம்
11. பந்தேரு நடனம்
12. பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்
13. கிராமத்து நடனம்
14. செம்பு நடனம்
15. அஸ்னே நடனம்
16. சதா பாலிய நடனம்

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 2004~06~27 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 1.00 மணி

நுழைவுச் சீட்டுக்களை மண்டபவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

அனுமதிக்கு முந்துங்கள்:

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

**T. K. ரூறிஸ்ற் இன்**


இல. 200, அரசடி வீதி, பலாலி வீதி
அருகில், கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 222 5680


(சி:10105)

# 05ஆம் ஆண்டு நினைவுகளில்...

## வீரவணக்கம்



மேஜர்
டிலானி/தேன்மொழி
(யூடிஸ்ராதிலகம் தில்லைநாயகம்)
தாயின் மடியில் தாயக மண்ணில்
04.08.1970 26.06.1999



லெப். கேணல்
தணிகைச்செல்வி
(சுப்பிரமணியம் சத்தியாதேவி)
தாயின் மடியில் தாயக மண்ணில்
13.05.1967 26.06.1999



மேஜர்
யாழிசை
(பரராசசிங்கம் மங்கயற்கரசி)
தாயின் மடியில் தாயக மண்ணில்
20.09.1972 26.06.1999

அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர்
யாழ். செல்லும் படையணி மகளிர் சிறப்புத்தளபதி

விடுதலைக் கனவை நெஞ்சிலே சுமந்தீர்
வித்தான போதும் வீர விருட்சங்களாய் வளர்ந்தீர்
அண்ணனின் விழிகளில் வேதம் படித்தீர்
ஆக்கிரமிப்பாளரின் குகையுள் தீயாய்ப் புகுந்தீர்
மக்களின் மனங்களில் மலர்களாய் மலந்தீர்
மண்ணின் மடியில் மைந்தராய்த் துயின்றீர்
நேற்றுவரை அன்னையாய் எம் அருகிருந்தீர்
இன்றெம் உள்ளே கலந்தே உணர்வானீர் - உம்
பாதத்தடங்களில் பயணம் தொடர்கிறோம்.
விடியலின் திசையினில் விரிகிறது. உம் புன்னகை முகம்
வெற்றியே அன்றி வேறெதையும் வேண்டாத வீரரே
வெல்லுவோம் வீர விடுதலையைத் தவிர
வேறெதையும்வேண்டோம் - நீர்
நிம்மதியாய் உறங்கும். வெற்றிச்சேதியோடு
சந்திப்போம்.

இவர்களுடன் மன்னார் பள்ளமடு சன்னார்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

போராளிகள்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

(4750)

# எரிவாயு வண்டி பேருந்துடன் மோதி வெடித்துச் சிதறி தீப்பற்றிக் கொண்டது


## ஈரானில் 90 பேர் உடல்கருகிப் பலி

(தெஹ்ரான்)

**ஈரானில் எரிவாயு நிரப்பப்பட்டவாகனமொன்று வெடித்துச் சிதறி தீப்பற்றிக் கொண்டதில் 90 பேர் உயிரிழந்துள்ளதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக ஈரானிய செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஈரானின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சகிதார்நகரில் உள்ள பொலிஸ்சோதனைச் சாவடி யிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. எரிவாயுவை ஏற்றி வந்தவாகனம் கட்டுப்பாட்டை இழந்து பொலிஸ் சோதனைச் சாவடிக்கு முன்நின்ற பேருந்து ஒன்றுடன் மோதியதன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டது. இதன்காரணமாக மேலும் 5 பேருந்துக்கள் எரிந்துள்ளன. உயிரிழந்தவர்கள் மற்றும் காய மடைந்தவர்களை மீட்கும் பணியில்மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஈரானிய பொலிசாரும் எரிந்த 6 பயணிகள் பேருந்தில் ,பயணித்த பயணிகள் உள்ளடங்குவதாகவும் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் செய்திகள் மேலும்தெரிவிக்கின்றன.



அலஸ்காவுக்கண்மையில் ஏற்பட்ட காட்டுத்தீ அணைக்கப்பட முடியாது தீவிரமாகப் பரவி வருகிறது. இதுவரை அங்கு 53 தீ விபத்துக்கள் ஏற்பட்டு 90 மைல் வீதியை மூடியிருக்கின்றது.



ஐக்கியநாடுகள் அமைதிப்படையில் அங்கம் வகிக்கும் ஜப்பானிய இராணுவ வீரர்கள் கிழக்குத் தீமோரை விட்டு வெளியேறுகின்றனர்.

# ஈராக்கின் கிளர்ச்சி நடவடிக்கையை அமெரிக்கா குறைத்துமதிப்பிட்டு விட்டது

## -அமெ.இராஜாங்க அமைச்சின் செயலாளர் கொலின்பவல்

(பாக்தாத்)

ஈராக்கின் கிளர்ச்சி நடவடிக்கைகளை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டு விட்டதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் கொலின் பவல் கூறியுள்ளார்.

நேற்று பி.பி.சிக்கு பேட்டி யளிக்கையிலேயே கொலின் பவல் மேற்கண்டவாறு கூறியு ள்ளார்.

அண்மைக்காலமாக ஈராக்கில் அமெரிக்க கூட்டுப்படையினர் மீதான தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவது தெரிந்ததே. இத்தாக்கு தல்களினால் நாளாந்தம் அமெரிக் கப்படையினர் ஈராக்கில் உயிரிழப் புக்களைச் சந்தித்து வருகின்றனர். அத்துடன் அமெரிக்க உள்நாட்டு அரசியலிலும் ஈராக்கில்அமெரிக்கப் படையினருக்கு ஏற்பட்டு வரும் இழப்புக்கள் தாக்கங்களை ஏற்படுத்தி வருவதோடு, ஆளும் கட்சிக்கு நெருக்கடிகளையும் ஏற்படுத்தி வருகிறது. அதுமட்டுமல்ல அமெரிக்காவுடன் கூட்டணி சேர்ந்து ஈராக்கிற்கு படைகளை அனுப்பிய நாடுகளும் அங்கு ஏற்பட்டு வரும் இழப்புக்களையடுத்து படைகளை வாபஸ் வாங்குவது பற்றி எதிர்க் கட்சிகளின் பலமான சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றன.இந்தப் பின்னணியிலேயே அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# அல்-ஹைதா சந்தேக நபர்கள் இருவர் பாக். படையினரால் கைது

அல்- ஹைதாவுடன் தொடர்பு இருக்கக் கூடும் எனும் சந்தேகத்தில் சவுதி அரேபியர் ஒருவரையும் பாகிஸ்தானியர் ஒருவரையும் பாகிஸ்தானிய பாதுகாப்புப் படை கைது செய்துள்ளது என்று உளவு அதிகாரிகள் நேற்று முன்தினம் கூறியுள்ளனர்.இந்த இரண்டு நபர்களும் ஆப்கானிஸ்தான் எல்லையில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் விசாரணைகளுக்காக பெஷாவர் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் உளவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# எமது யோசனையை அமெ.ஏற்காவிட்டால் அணு ஆயுத பரிசோதனை நடத்தப்படும்

## ------வடகொரியா அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

நிவாரணங்களுக்காக அணு வாயுதத் திட்டங்களை கைவிடுவது தொடர்பான தமது யோசனைகளை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாது விட்டால் அணுவாயுத பரிசோதனையை மேற்கொள்ளப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது.



ஈராக்கில் நேற்று முன்தினம்தீவிரவாதிகள் நடத்திய தொடர்த் தாக்குதல்களில் ஒன்றான மொசூல் நகரில் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் தேடுதல் நடத்தும் ஈராக்கியப் பொலிசார்.

சீனத் தலைநகரில் வடகொரியா அமெரிக்கா ஆகிய இருநாடுகளைச்சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்ற இரு தரப்பு பேச்சுவார்த்தையின் பின்னர் இவ்வாறானதொரு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவின் அணுவாயுத நெருக்கடிகளைத் தீர்க்கும் ஆறு சுற்று கலந்துரையாடலுக்கு புறம்பாக இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்திற்கிடமான அணுவாயுதத் திட்டங்களை வடகொரியா பூரணமாக கைவிடுவதற்கு இணங்கும் பட்சத்தில் வடகொரியாவிற்கு எரிபொருட்களை வழங்கும் அமெரிக்காவின் யோசனைகள் பற்றியும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



ஈராக் பஸ்ரா கடலில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள பிரித்தானியத் துருப்பினர்.

# அமெரிக்காவிலுள்ள வெளிநாட்டவர் விஸா பெறுவதில் புதிய நடைமுறை

(ஷோஷிங்டன்)

அமெரிக்கா தமது நாட்டில் பிற நாட்டவர்களின் வதிவிட விஸாவைப் புதுப்பித்தலில் புதிய நடைமுறைகளை அறிவித்துள்ளது.

புதியநடைமுறையின்படி பிற நாட்டவர்கள் தமது நாடு சென்று விஸாவைப் புதுப்பித்துக் கொண்ட பின்னரே அமெரிக்கா திரும்ப வேண்டும்.

முன்னர் தபால்மூலம் விஸாவைப் புதுப்பித்துக்கொள்ள முடியும் எனும் நடைமுறையை அமெரிக்கா கடைபிடித்தது. தற்போது இந்தநடைமுறையை மாற்றயமைத்துள்ளது.

அமெரிக்காவிஸா வைத்திருப்பவர்களில் 50 சத வீதமானவர்கள் இந்தியர்கள்என்பது குறிப்பிடத் தக்கது.

இவர்கள் அனைவரும் புதியநடை முறையின்படி விஸாவைப் புதுப் பிப்பதானால் இந்தியா சென்றே விஸாவைப் புதுப்பித்துக்கொண்டு அமெரிக்கா செல்லமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவர்கள் அனைவரும் ஜுலை 16ஆம்திகதி முதல் இந்தியாசென்று விஸாவைப் புதுப்பிக்க வேண்டுமென அமெரிக்கா காலஅவகாசம் வழங்கியுள்ளது.

தமது நாட்டின்பாதுகாப்பை அதிகரிப்பதன் பொருட்டே இந்த நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாக அமெரிக்காவின் செய்தித் தொடர்பாளர் றிச்சட் பௌச்சர் கூறியுள்ளார்.

### தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க விஞ்ஞானிகள் சார்ஸ் நோய்க்குதடுப்பு மருந்தை கண்டு பிடித்துள்ளார்கள்.

சார்ஸ் நோயை ஏற்படுத்தும் வைரசினை எதிர்க்கக்கூடிய வகையில் இந்தத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க நாஸா நிறுவனத்தின் முகாமைத்துவ கட்டமைப்பில் மாற்றம்

(வோஷிங்டன்)

நாஸாஎன்ற அமெரிக் காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் முகாமைத்துவ கட்ட மைப்பு ரீதியான மாற்றங்கள் பற்றி அறிவித்திருக்கின்றது.

இத்தகைய மாற்றங்கள் அந் நிறுவனத்தை சீரானதாக மாற்றி எதிர் கால ஆய்வுநடவடிக் கைகளுக்காக தனியார் துறையின் உதவிகளை சிறப்பான முறையில் பெறுவதற்கு வழிவகுக்குமென நிறுவனத்தின் நிர்வாகி தெரிவித்திருக்கிறார்.

நாஸா நிறுவனம் செவ்வாய் கிரகத்திற்கும் விண்வெளி வீரர்களை அனுப்பி ஆராய்ச்சி செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்நிலை யில் இ னம் மீண்டும் வி வெளி ஓடங்களை விண்ணில்ஏவிசாவதேச விண்வெளி நிலையத்திற்கான பயணத்தை ஆரம்பிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரி விக்கப் படுகின்றது.

விண்வெளி நிலையத்தில் இருந்து திரும்பிய கொலம்பியா என்ற விண்கலம் வீழ்ந்து நொருங்கியதையடுத்து நாஸாவில் இருந்து விண்வெளி ஓடங்கள் ஏவப் படவில்லை என்பது குறிப் பிடத்தக்கதே.

# முழுப்பலத்தையும் பயன்படுத்தி பயங்கரவாதத்தை ஒடுக்குவோம்

## - இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங்

(புதுடில்லி)

பயங்கரவாதத்தைத் தமது அரசு முழுப்பலத்தையும் பயன்படுத்தி ஒடுக்கும். அத்துடன் கூரிய மாநாடு உட்பட வன்முறைப் பாதையினை கைவிடும் எல்லாக்குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுடன் எல்லாவிதமான வகையிலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஜம்மு-காஷ்மீர் உட்பட அனைத்துப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காண தீவிரமுயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு இந்தியப்பிரதமர் மன் மோகன் சிங் நேற்றுமுன்தினம் தொலைக்காட்சியூடாக மக்களுக்கு உரையாற்றும் போது உறுதியளித்துள்ளார்.

கிராமங்களை வளர்ச்சிப் பாதையில் நகர்த்துவதற்கு தமது அரசிடம் புதிய திட்டங்கள் உள்ளது என்றும் அவர் தனது முதல் தொலைக் காட்சி உரையில் கூறியுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை விவாதிக்க பாராளுமன்றம் செயற்படவேண்டும். அதற்கு எதிர்கட்சிகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார் விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அழிக்கும் வகையில் வேளாண்மைப் பொருட்களுக்கும், தோல் பொருட்களுக்கும் ஒரே சந்தை உருவாக்கப்படவேண்டும் வேளாண் வர்த்தகத்தில் நிலவும் தடைகள் அகற்றப்படவேண்டும், நவீன விலைக்கொள்கை, பொருளாதார சீர்திருத்தம் என்பவற்றின் மூலமே கிராமப்புறவளர்சிக்குப் புதிய உத்வேகம் அளிக்கவேண்டும் என்று கூறிய அவர்,

சுகாதாரக்கொள்கையில் மாற்றம் வேண்டும், நாடு முழுவதும் மருத்துவமனைகளைச் சீரமைக்க வேண்டும், பொருளாதார வளர்ச்சி மூலம் புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும். வறுமையை ஒழித்து வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், அனைவருக்கும் பொதுச் சுகாதாரம், பாதுகாக்கப்பட்டு குடிநீர், ஆரம்பக் கல்வி கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## வெடிபொருட்கள்...

வும் வெண்புறா, ரீ.ஆர்.ஆர்.ஓ என்பன இதில் சர்வோதயாவும், வெண்புறாவும் வீடுவீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் கிராமிய மட்ட நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துகின்றார்கள். அதுமட்டுமன்றி மிதிவெடி அகற்றுகின்ற பிரதேசங்களில் மிதிவெடி அகற்றுபவர்களுக்கும் மக்களுக்குமிடையில் ஒரு தரகராக நின்று மக்களின் பிரச்சினைகளை மிதிவெடி அகற்றுபவர்களுக்கும், மிதிவெடி அகற்றுபவர்களின் பிரச்சினைகளை மக்களுக்கும் கூறி இரண்டு தரப்பினருக்குமிடையில் நல்லுறவை வளர்த்துவருகின்றனர். இந்த இரண்டு விடயங்களையும் வெண்புறாவும், சர்வோதயாவும் இணைந்து மேற்கொள்கின்றன.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை மிதிவெடி அபாய எச்சரிக்கைப்பலகைகளை எடுத்துச் செல்கின்றனர். இவ்வாறு இனங் காணப்பட்ட பகுதிகளை அசட்டை செய்து அதனுள் செல்கின்றனர். இப்படியான சில செயல்களை மக்கள் மேற்கொள்கின்றனர். மக்களுக்கு இது பற்றி நாம் தொடர்ச்சியாக எடுத்துக்கூறியும் அவர்கள் அதை அசட்டை செய்து வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளைக கட்டுப்படுத்த பிரதேச செயலர்கள் கிராமசேவகர்கள் ஊடாக வேலைத் திட்டங்களை நகர்த்த இருக்கிறோம்.

அடுத்ததாக ரீ.ஆர்.ஆர்.ஓ நிறுவனமும் சிறந்த முறையில் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. பாடசாலைகள், குடியிருப்புக்கள் போன்ற பகுதிகளில் சென்று வீதிநாடகங்கள் ஊடாக மக்களை விழிப்படையச் செய்கிறார்கள். வரும் மாதத்தில் இருந்து வீடியோப்படக்காட்சிகள் மூலம் மக்களுக்கு வெடிபொருட்கள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த இருக்கிறோம். ★

---

பனங்காமம் பற்று பல நோ. கூ. சங்கம்
வவுனிக்குளம்

## பணிநிலை வேண்டுகை

எமது சங்கத்தின் தற்காலிகமாக லொறி சுத்திகரிப்பாளர் பதவிக்குக் கீழ்வரும் தகைமையுடையோருடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. எனவே, தகுதியானவர்கள் 06.07.2004ஆம் திகதிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கத்தக்கதாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

பதவி: லொறி சுத்திகரிப்பாளர் (தற்காலிகம்)

ச.கு இலக்கம்: 314.16

சம்பள அளவுத் திட்டம் : 2650 ÷3750 / 50X10÷60X10

வெற்றிடங்களுக்கான எண்ணிக்கை: 02

தகைமை : கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத் திட்டத்தின் கீழ் ஆகக் குறைந்தது ஒரு வருடம் அனுபவம் அல்லது 5ஆம் ஆண்டு சித்தியுடன் நல்ல ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை : 18–45 வரை

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவா,
பனங்காமம்பற்று பல நோ. கூ. சங்கம்,
வவுனிக்குளம். (சி-4127)

---

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண் பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள் –

01) கல்வித் தகைமை :- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல்
02) அகவை :- 23 தொடக்கம் 35 வரை.
03) உயரம் :- 05 அடி 05 அங்குலம்.

குறிப்பு:-

01) விண்ணப்ப முடிவு நாள் :- 08–07–2004
02) அடிப்படை மாத சம்பளம் :- 3600–4700
................................ +2000.00=5600.00
10X110
03) விண்ணப்ப தாரருக்கான நேர்முகத் தேர்வு : – 11–07–2004 ஆகிய நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழகம் பணிமனையில் நடைபெறும்.
04) நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05) விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகாமலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு. (4734)

---

## செஞ்சிலுவைச் சங்க அழைப்பு

கீழே பெயர்குறிப்பிட்ட நபர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்.)

சபாரட்ணம் சாந்தி, குழுழமுனை, டூள்ளியவளை.
சோதிராஜன் டயஸ், சேர்கிற் பங்களா, மடு ஆலயம்.
ராஜகோபால் மீனம்மா, D1332., O.R.C., மடு
ஐங்கரமுத்து ஜீவராணி, D1338 O.R.C, மடு.
பெருமாள் ராதாகிருஷ்ணன், உருத்திரபுரம் மேற்கு, சாளம்பன் அல்லது பேசாலை அகதிகள் முகாம், மன்னார்.
சித்தம்மா குலாஸ், இல. 473, பிரிவு E,O.R.C, மடு.
பிலிப்பையா றொபேட் சிறி, பிரிவு E, O.R.C, மடு.
செல்லத்துரை, M.P.C.S, பாலமோட்டை.
ஜீவமலர், பிரிவு–A, அகதிகள் முகாம், மடு
ஐயாத்துரை சுபாசினி, மே/பா தியாகா ஸ்ரோர், புதிய குடியிருப்புத் திட்டம்.
அன்ரன் ஜோசப் யோகராணி, பிரிவுE, O.R.C., மடு.
கொன்சன்ரைன் பரணிதேவி, மில்லர் அகதிமுகாம், செம்பியன்பற்று வடக்கு, வடமராட்சி.
சிவலிங்கம் சடாட்சரம்மா, டேவிட் அகதிகள் முகாம், செம்பியன்பற்று தெற்கு, வடமராட்சி.
செல்வராஜா முத்துலட்சுமி, இல. 265, ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம்.
செல்வநாயகம் அருணாதேவி, நெத்தலியாறு மேற்கு, 10ஆம் கட்டை, விசுவமடு.
செல்லமணி பத்மாவதி, 4ஆம் கட்டை, அக்கராயன்.
தங்கராஜா மகேஸ்வரி, கோட்டைகட்டிகுளம், அக்கராயன்.
செல்லம்மா, களஞ்சியம், அக்கராயன்.
சரவணமுத்து செல்வநாயகம், இல. 698, 7ஆம் யுனிற், இராமநாதபுரம், வட்டக்கச்சி.
விமலதாஸ் மரியதிரேசா, இடைக்காடு, மாத்தளன்.
யோகராஜா யோகம்மா, மடு அகதிகள் முகாம், பண்டிவிரிச்சான்.
ரவிக்குமார் கோணேஸ்வரி, இ. 24, யூனியன்குளம், கிளிநொச்சி.
விக்கினேஸ்வரி, இல. 48, நலன்புரி நிலையம், மடு.
இராமசாமி இருதயமலர், வலைப்பாடு அல்லது நாச்சிக்குடா.
இராசையா கனகம்மா, கிருஸ்ணாகோயில் ரயில் றோட், மாங்குளம். (4749)

---

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## காவலர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண் பாலோர் காவலர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள் –

01) கல்வித் தகைமை :- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல்.
02) அகவை :- 23 தொடக்கம் 35 வரை.
03) உயரம் :- 05 அடி 05 அங்குலம்.

குறிப்பு:-

01) விண்ணப்ப முடிவு நாள் 02–07–2004
02) விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத் தேர்வு 05–07–2004 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழகம் பணிமனையில் நடைபெறும்.
03) நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04) விண்ணப்பப் படிவங்களை தங்கள் சொந்த எழுத்தில் நிறைவு செய்து அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு. (4733)

# உலர் உணவு நிவாரண விநியோகத்தில் நிலுவைப்பணத்தைத் தருமாறு கோரிக்கை

## யாழ்.மாவட்ட ப.நோ.கூ சங்கங்கள் சனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

**இடம் பெயர்ந்த மக்களுக்கான உலருணவு நிவாரணத்தை வழங்கியமைக்காக அரசாங்கத்தினால் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதியை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் கனகசபாபதி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்புகளின் போது இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளை அரசும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களும் தராத போதும் யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் தமது கையிருப்பில் இருந்த உலருணவுப் பொருட்களை மக்களுக்கான உலருணவு நிவாரணமாக வழங்கி வந்தன.

இதனால் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பொருள் விநியோக விடயங்களைக் கவனத்தில் கொண்டு இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண வழங்கலுக்காக அரசினால் வழங்கப்படவேண்டிய நிதி ஒதுக்கீட்டின் நிலுவைகளை உடனடியாகவே யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் கனகசபாபதி கோரியுள்ளார் இது குறித்து சனாதிபதி சந்திரிகாவிற்கு கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்(33)

# கல்வியங்காடு செங்குந்தா வீதி மிக மோசமான நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள செங்குந்தா வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புகள் ஏதுமற்ற நிலையில் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இவ்வீதியின் சீரற்றதன்மையால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். நல்லூர்ப் பிரதேச சபையிடம் அப்பகுதி மக்கள் முறையிட்டும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என வலை தெரிவித்துள்ளனர். (33)

# திருக்குறள் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பயின்று வரும் தரம் 01 தொடக்கம் 05 வரையிலான மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி இன்று காலை 9.00 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற வுள்ளது.

இப்போட்டியின் முடிவில் வெற்றி பெறும் சிறார்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வேலி தெற்கு ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று இடம் பெறவுள்ளது.

இதனை ஒட்டி ஆலயத்தில் விசேடபூஜை வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. (33)

# சமகால அரசியல் கருத்தரங்கின் பதினோராவது தொடர் நாளை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுவரும் சமகால அரசியல் கருத்தரங்கின் 11 ஆவது தொடர் நாளை மாலை 3.30 மணிய ''வில் யாழ். நாவலர்கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ''ஈழவிடுதலைப் போராட்டமும் எதிரான ஊடகங்களின் உளவியல் யுத்தமும்'' என்ற தலைப்பிலான கருத்துரையினை "நமது ஈழநாடு நாளிதழின் பிரதம ஆசிரியர் ராதேயன் வழங்கவுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து யாழ். குடாநாட்டு மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் ஏற்கனவே 10 அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் யாழ். குடாநாட்டில் பரவலாக இடம் பெற்றுள்ளமையும் இவற்றில் பங்குபற்றி ஏராளமானோர் பயன் பெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

# சனசக்தித் திட்டத்தின் கீழான வைப்புத்தொகையை மீளத்தரக்கோரி ம.உ. ஆணைக்குழுவில் மனு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் சிறிலங்கா சனாதிபதி பிறேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட சனசக்தி நிவாரண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வைப்புச் செய்த பணத்தினை மீளப்பெறுவதற்கு உரிய வழிவகைகளை ஏற்படுத்தித்தருமாறு கோரி பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த 111 பேர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் செய்யப்பட்ட இம்முறைப்பாடுபற்றி தெரிய வருவதாவது, முன்னாள் சனாதிபதி பிறேமதாஸவினால் அமுல் செய்யப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி 111 பேராலும் பெருந்தொகைப் பணம் வைப்புச் செய்யப்பட்டது.

ஆனால் காலப்போக்கில் சனசக்தி நிவாரண அபிவிருத்தித் திட்டம் அரசினால் கைவிடப்பட்டதால் முன்னைய அரசின் வாக்குறுதிகளை நம்பி சனசக்தி வங்கிகளில் மக்களால் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை மீளப்பெற முடியாத சூழ்நிலைதோன்றியிருக்கிறது.

எனவே முன்னைய பிறேமதாஸவின் அரசினால் தம்மிடமிருந்து சனசக்தி புனர்வாழ்வுத் திட்டம் என்ற பெயரில் பெறப்பட்ட பணத்தைத் தாம் மீளப்பெற்றுக் கொள்வதற்கு வழிசெய்யக் கோரியே மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி R.பிரியதர்சன் இது சம்பந்தமாக விளக்கம் கோரி அரசாங்கத்திற்கு உடனடியாகவே கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (33)

# 105 ஆவது பிறந்ததினம்

தமிழ்ப்பெரியார் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையின் 105 ஆவது பிறந்த தினவிழா இன்று காலை 9.30 மணியளவில் யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நூல் வெளியீட்டுச்சபைத் தலைவர் திருமதி சிவபாக்கியம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் பிரபல தமிழ் வித்தகர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (33)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாதாந்தக் கருத்தரங்கு

(யாழபபாணம)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தென்மராட்சி பிரதேச ஆதரவாளர்களுக்கான மாதாந்தக் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 10.00 மணியளவில் சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள "ராஜ் அகத்தில்" இடம் பெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தலைமையில் இடம் பெறவுள்ள இக்கருத்தரங்கில் தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள், புனர்வாழ்வுத் திட்டங்கள், மக்களின் இயல்வு வாழ்வுப் பிரச்சினைகள், சமகால அரசியல் நிலைமைகள்குறித்துஆராயப்படவுள்ளதெனஅறிவிக்கப்பட்டுள்ளது..(33)

# சங்கானைப் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானைப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளில் கற்று வரும் சிறார்களுக்கான முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மாலை சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளிச்சிறார்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக நடைபெறும் இவ்விளையாட்டு விழாவில் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சகல முன்பள்ளிகளது சிறார்களும் கலந்துகொள்வர். (33)

# மா.சபை தேர்தல் வன்முறை 129 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் இதுவரை நேற்றுடன் மட்டும் 129 ஆக அதிகரித்திருக்கின்றது. இதில் 102 முறைப்பாடுகள் தேர்தல் விதி முறைகளை சட்டங்களை மீறியவை தொடர்பானவையாகும்.

ஏனையவை குற்றவியல் சட்டத்தை மீறியவை தொடர்பான முறைப்பாடுகளாகும்.

நேற்றுக்காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தினுள் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான ஏழு முறைப்பாடுகள் பொலிஸ் தேர்தல் செயலகத்திற்குக் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணையகம் கூறியுள்ளது.

# சட்டத்தரணி மீதான பொலிசாரின் குற்றச்சாட்டு தொழில் உரிமையை மீறும் செயலாகும்

## -சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

கட்சிக்காரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொலிசாரின் கடமைகளிற்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சாட்டப்படுவது சட்டத்தரணிகளின் தொழில் உரிமைகளை மீறும் செயல் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை தாம்வன்மையாகக் கண்டிப்பதாக சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் சனாதிபதி சட்டத்தரணி இக்ரம் முகமத் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கைது செய்ய கடந்த புதன் கிழமை பொலிசார் முயற்சி மேற்கொண்ட வேளை ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பாக பொலிசார் சமர்ப்பித்த நீதிமன்ற அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். ரவி கருணாநாயக்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி G. G. அருட்பிரகாசம் பொலிசாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக பொலிசார் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்ததாக அவர்சுட்டிக்காட்டினார். சட்டத்தரணி அருட்பிரகாசம் தனது கடமையையே செய்ததாக இக்ரம் முகமத் மேலும் குறிப்பிட்டார்.

# தகவல் தொழில் நுட்பத்தைப் பாடமாக சேர்க்க விரும்பும் அதிபர் அமைச்சிற்கு விண்ணப்பிக்குக

(கொழும்பு)

பொதுத்தகவல் தொழில் நுட்பப் பாடத்தை தமது பாடசாலைகளில் பாடமாக சேர்த்துக் கொள்வதற்கு விரும்பும் பாடசாலை அதிபர்கள் தமது விண்ணப்பங்களை கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு கல்வியமைச்சு கோரியுள்ளது.

இந்த வீருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பாடங்களில் ஒன்றாக தகவல் தொழில் நுட்பப்பாடம அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் தமது பாடசாலைகளில் இந்தப்பாடத்தை புகுத்த விரும்பும் பாடசாலை அதிபர்கள் தமது விண்ணப்பங்களை கல்வியமைச்சிற்கு ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். இந்த விண்ணப்பங்கள் வலயக்கல்விப் பணிமனை ஊடாகவே கல்வியமைச்சிடம் அனுப்ப வேண்டும் என்றும் கல்வியமைச்சின் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பொலிஸ் திணைக்களத்தின் மீது "பவ்ரல்" அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையொட்டி அரசியற் கட்சிகளால் வைக்கப்பட்டிருக்கும் கட்அவுட்டுக்கள் சுவரொட்டிகள் பதாகைகளை அகற்றுவதில் பொலிஸ் திணைக்களம் ஆர்வமற்ற ஈடுபாட்டினையே காட்டுவதாக பவ்ரல்(PAFFREL) அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இருந்தும் பொலிஸ்மா அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள மாவட்டங்களில்பாதுகாப்புத் தொடர்பான முக்கிய தீர்மானங்களை அமுல்ப் படுத்தியுள்ளார் என்றும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை பொலிஸ் தேர்தல் செயலகம் இதுவரை 159 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கின்றது. பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ பத்தாயிரத்திற்குமேற்பட்ட கண்காணிப்பாளர்கள் அமைதியான கண் காணிப்பு நடவடிக்கையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும்,

சுமார் 1250 கண்காணிப்பாளர்களுடன் மேலதிக 250 நடமாடும் வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## முல்லை.மாவட்ட நுண்கலைக் கல்லூரி ஆனி மாத அறிவோர் கூடல் நிகழ்வு

இடம்:- முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி மண்டபம்
காலம்:-28.06.2004, திங்கள், மாலை 4.30 மணி

**நிகழ்த்துபவர்**

திருமதி மு. உதயராணி அவர்கள்
(உதவிக்கல்விப் பணிப்பாளர், முல்லை. வலயம்-சங்கீதம்)

**தலைப்பு**

"மனித வாழ்வின் ஆவணப்படுத்தலில் இசை"

அனைவரும் கலந்துகொள்ள அழைக்கிறோம்

(4728) நுண்கலைக்கல்லூரியினர்

## கேள்வி அறிவித்தல்

01. குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தித் திட்டத்தின் நிதி மூலம் கீழ்க் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகள் மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து இதன்கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்குக் கோரப்படுகின்றது.

02 மீளளிக்கப்படாத கட்டணமாக கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது மாற்றத்தக்கதான மாவட்ட செயலாளர் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் பெறப்பட்ட வங்கி ஆணையாக/காசுக்கட்டளையாக மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்த பின்பு, முல்லைத்தீவு பிராந்திய உ.உ.ஆ. அலுவலகத்திலிருந்து 14.07.2004ஆம் திகதி 15.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. ஆர்வமுள்ள தகுதியான ICTAD கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவு பிரா. உ. உ. ஆ அலுவலகத்தில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களைப் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.

04. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 45 நாட்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு அவர்களின் பெயரில் எடுக்கப்ட கேள்விப்பிணைக்கான வங்கி ஆணை/காசுக்கட்டளையையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 2004.07.14 15.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

05. அதேதினம் பி.ப.15.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் அலுவலகம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாட்களில் அதே இடத்தில், அதேநேரத்தில் கேள்விகள்பெறப்பட்டு திறக்கப்படும். ஏனைய விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| குறியீட்டு. இல | வேலை விபரம் | கேள்விப்பிணைரூபா (மீளளிக்கக்கூடியது) | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா (மீளக்கப்படாதது) |
|---|---|---|---|
| MLT/LGO/PSDG/SH/04 | வலுவூட்டும் பயிற்சி நிலையம் அமைத்தல் | 15000.00 | 750.00 |

கேள்விதாரர்கள் கேள்விக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 01 ஆவது பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளில் ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்தக் கேள்விப்பத்திரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்ததாரருக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

திருமதி. இமெல்டா சுகுமார்,
அரச அதிபர்/மாவட்டச் செயலாளர்,
முல்லைத்தீவு.

(சி.9134)

## 5ஆம் ஆண்டின் நினைவுகளில்

மலர்வு 27 - 12 - 1981



உதிர்வு 26 - 06 - 1999

**வீரவேங்கை சுதா/ கலைச்செல்வி**
**(டேவிற் மேரி சுகிர்தா)**

9ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.


கரிகாலன் படையணியில்
புதுவரலாறு படைக்கவென
களம் நோக்கிப் புறப்பட்ட
எம் செல்லச் சுகியே!
ஐந்தாண்டு சென்றாலும்
ஆறாத் துயரில் துடிக்கின்றோம்
உன் புன்னகை முகம் எங்கே? எங்கே?

உன்பிரிவால் துடிக்கும்
குடும்பம். உறவுகள்

(4654)

## மேஜர் யாழிசையின் 5ஆம் ஆண்டு நீங்காதநினைவுகள்

பிறப்பு 20 - 04 - 1972



வீரச்சாவு 26 - 06 - 1999

**மேஜர் யாழிசை**

(பரராஜசிங்கம், மங்கயற்கரசி
கெருடமடு, முத்தையன்கட்டு)

விடுதலை வானில் சிறகுகள் விரித்து
விண்ணதிர்ந்திட வீரம் செறிந்தது.
விடுதலைக்காய் வித்தாகிய - உந்தன்
விடுதலை மூச்சு எங்கள் சுவாசத்திற்காய்...

உந்தன் நினைவுடன்...
பெற்றோர், சகோதரர்கள் சகபோராளிகள்

(4740)

## நினைவழியா நினைவுகளில்

5ஆம் ஆண்டின் நினைவில்

தாயின் மடியில் 04 - 08 - 1970



தாயக மண்ணில் 26 - 06 - 1999

**மேஜர் தேன்மொழி/டிலானி**

(பொன்.தில்லைநாயகம் யூடிஸ்ராதிலகம்)

ஆண்ட பரம்பரை அடங்கிய போது
ஆசைகளை அடக்கி வைத்து
உறவுகளை ஒதுக்கி வைத்து
உறவுகளின் பாசங்களைத் தள்ளி வைத்து
தேசத்தை நினைவில் வைத்து
தமிழர் தாகத்தை நெஞ்சில் சுமந்து
தலைவன் வழிதனில் தேன்மொழியான
என் இனிய அக்காவே!!
இளமை வர்ழ்வை தூக்கி எறிந்து
இளம் தலைமுறைக்கு வாழவழி தந்து
பள்ளமடுவில் தாண்டிய பகை வென்று
கல்லறையில் உறங்கும் அக்காவே!
தாயகம் விடியும் வரை உன்
நினைவுகளைச் சுமந்து
தொடர்வேன் உன்பணி...

என்றும் உன் நினைவுடன்
தங்கை குட்டியா (போராளி)

(4732)

# புவியின் மையத்தில் நடப்பதென்ன?



புவியின் மேற்பகுதியில் காணும் இயற்கையான பௌதிக உறுப்புக்கள் பற்றி நாம் விளங்கிக் கொள்ளத் தேவையில்லை. எனினும் புவியின் மையப் பகுதியின் செயற்பாடுகள் பற்றி விஞ்ஞானிகள் இதுவரை தெளிவான விளக்கமளிக்கவில்லை. காரணம் அது பிரச்சினைக்குள்ளான விடயமாகும். பூலோக பௌதிகவியல் விஞ்ஞானியான டொன் அன்டர்சன் குறிப்பிட்டுள்ளதாவது ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவ்வப்போது நிகழும் மாற்றங்களைப் போன்று புவியின் மையத்திலும் அவ்வப்போது மாற்றங்களும், அசைவுகளும் ஏற்படுவதாக தெரிவிக்கின்றார். அத்துடன் அதற்கான காரணங்களை விஞ்ஞானிகளே கண்டுபிடிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கிறார்.

இற்றைக்கு 4.6 மில்லியன் வருடங்களுக்கு முன்பு தூசு மண்டலம் ஒன்று திண்மமாகியதாலேயே புவி தோன்றியது என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. கடும் வெப்பக் கோளமாக இருந்த புவியின் மேற்பரப்பு காலப் போக்கில் குளிர்ச்சியடைந்ததாகவும் மையப் பகுதியை நோக்கிய ஏனைய பகுதிகள் உருண்டையான திரவப் பொருட்களைக் கொண்டதெனவும் சொல்லப்படுகிறது. மேலும் ஒரு விஞ்ஞானியான கெல்வின் சாமிவரயா கூறுவதாவது திரவங்கள் ஒன்றுதிரண்டு புவியின் மையப் பகுதியில் இறுகி இருப்பதாகவும் அவை உருக்குப் போன்ற மிகக் கடினமான பொருளாகும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார். கொதிநிலையிலுள்ள இவ் உருக்குக் குழம்பு அவ்வப்போது மையப் பகுதியில் அசைவதால் எரிமலைகளாகவும் புவிநடுக்கமாகவும் தோன்றுவது நமக்குத் தெரிகின்றது. புவியின் உட்பகுதியின் அசைவுகளால் அவை மேற்பரப்பை வந்து தாக்கும் போதே இவ்வாறான புவி நடுக்கம், எரிமலைக் குமுறல் போன்றவை ஏற்படுகின்றன.

புவியில் எங்காவது ஒரு மூலையில் எமக்குத் தெரியாமல் ஏற்படும் புவி நடுக்கங்களுடன் வருடத்தில் ஆயிரம் புவிநடுக்கச் சம்பவங்கள் தோன்றுகின்றன. அவையாவும் புவி மையப்பகுதியில் ஏற்படும் பாரிய அசைவுகளாலேயே ஏற்படுவதாகக் கலிபோர்னிய விஞ்ஞானியான ரேமன்ட் ஜுன்லஸ் தெரிவிக்கின்றார்.


அவ்விஞ்ஞானியுட்பட்ட ஆய்வுக் குழுவினருக்கு மேலும் ஆய்வுகள் நடத்துவது பற்றி சிந்தனை ஏற்படவில்லை எனினும் ஒரு விஞ்ஞானியின் கூற்று பொய்யாகக் கூடாது என்பதில் அவர்களின் கவனம் திரும்பியிருக்கின்றது.

இங்கிலாந்து விஞ்ஞானியின் கருத்து யாதெனின் மேற்கூறப்பட்ட வாயுக் குழம்பு வடதுருவத்தினூடாக புவிமேற்பரப்பை அடையும் என்பதே. அத்துடன் அவர் ஐசாக் நியூற்றனின் புவியீர்ப்புக் கொள்கையையும் ஏற்றுக்கொண்டார்.

பிரித்தானியாவின் கெல்வின் சாமிவரயா என்பவர் மேலும் ஒரு உண்மையை வெளியிட்டுள்ளார். அதாவது புவி கொதிநிலையிலிருந்து குளிர்வடைந்து வந்துள்ள படி முறையைக் கொண்டு புவி 20 முதல் 100 மில்லியன் வருடங்களுக்கு முன்பு உருவாகியதாகத் தெரிவிக்கிறார்.

எனினும் இவரின் கருத்தை டார்வின் என்ற விஞ்ஞானி மறுப்பதோடு அதன் பரிணாம வளர்ச்சியை அவதானிக்கும் போது புவியின் வயது அதற்கு மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கிறார்.

புவியானது இரண்டு அரைக் கோளங்களாகப் பிரிக்கப்பட்டு அவ்வரைக்கோளங்களில் ஏற்படும் மோதல்கள் காரணமாகவும் புவிமேற்பரப்பில் மாறுதல்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




புவி மையப்பகுதியில் உள்ள வாயுக்களும் இரசாயனத் திரவங்களும் அந்தந்த வலயங்களுக்குள்ளேயே செயற்படும் விதமும் அவை ஒன்றிணைந்து செயறபடும் விதமும் கணினி மூலம் எடுக்கப்பட்ட படத்தில் காட்டப்பட்டுள்ளது

இக்கருத்திலும் வெவ்வேறான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒருசாரார் மேற்கூறியவாறு இரு அரைக்கோளங்களினதும் மோதல்களினால் மேற்பரப்பில் மாற்றம் ஏற்படுகின்றதென்றும் இன்னும் ஒருசாரார் முழுக்கோளத்திலும் ஒரேவிதமான அசைவுகளே காணப்படுவதாகக் கூறுகின்றனர்.

உண்மையில் புவியின் மையப் பகுதிக்குள் என்ன நடைபெறுகின்றது என்பதை இது வரை யாரும் திட்டவட்டமாகக் கண்டு பிடிக்கவில்லை.

அப்படிக்கண்டு பிடிக்க வேண்டுமாயின் புதிய தொழில்நுட்பக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். விசேடமாக கணினிமயப்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் மூலம் புவியின் சலனம் செயற்பாடுகள் என்பனபற்றிய சரியான தகவல்களைப் பெறமுடியும். விஞ்ஞானி பவுல் டெக்லி கணனியின் உதவியுடன் 2 பில்லியன் வருடங்களுக்குள் புவியில் நிகழ்ந்த சம்பவங்களை பதிவு செய்திருக்கின்றார். எவ்வாறாயினும் புவியின் மையப் பகுதி தொடர்பாக நடைபெறும் ஆய்வுகள் இன்றுவரை கடைசி முடிவுக்கு வந்துவிடவில்லை. நிகழும் சம்பவங்களின் அடிப்படையில் புவியில் வாழும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி ஒன்றோடு ஒன்று தொடர்பு இருப்பது மட்டும் உறுதியாகிறது.

## கம்யூட்டரே கதியென்றால் குழந்தைகளுக்குப் பாதிப்பு

பள்ளி செல்லும் வயதுக்கு முந்தைய கால கட்டத்தில் கம்யூட்டர்களைப் பயன்படுத்தும் குழந்தைகளுக்கு படிப்புத் திறமை சிந்தனைத் திறன் நன்றாக மேம்படுவதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். 3 முதல் 5 வயதுள்ள 122 குழந்தைகளை பரிசோதனை செய்து பார்த்த போது இந்த உண்மை தெரியவந்ததாக அவர்கள் கூறியுள்ளனர். கம்யூட்டர்களைப் பயன்படுத்தாத குழந்தைகளுடன் ஒப்பிடும் போது வாரத்துக்கு 3 அல்லது 4 முறை கம்யூட்டர்களைப் பயன்படுத்தும் குழந்தைகள் தேர்வுகளில் நன்றாக மதிப்பெண் எடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.



ஆனால் இதே விஷயம் தொடர்பாக நடத்தப்பட்ட மற்றைய ஆய்வுகளில் கம்யூட்டரைப் பயன்படுத்துவதற்கும் குழந்தைகளின் மொழி, அறிவு, சிந்தனைத் திறன், எழுத்துக்கள், எண்களை எளிதில் அங்கீகரிக்கும் இயல்பு ஆகியவற்றிற்கும் இடையே எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று கூறுகின்றனர். இன்னும் சொல்லப்போனால் கம்யூட்டரே கதி என்று கிடக்கும் குழந்தைகள் விளையாட்டு உள்ளிட்ட குழந்தைப் பருவப் பரிசுகளை இழந்து விடுகிறார்கள் என்று அவர்கள் கூறி உள்ளனர். அதே போல தற்போது கம்யூட்டர்களையே பயன்படுத்தும் குழந்தைகளில் 56 சதவீதம் பேர் எலக்டானிக், வீடியோ விளையாட்டுக்களையே விளையாடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு ஒரு திறமையும் வளராது. ஆனால் கல்வி தொடர்பான சொப்வெயர்களை பயன்படுத்துவதன் மூலம் குழந்தைகளின் அறிவுத்திறன் சிறப்பாக வளர வாய்ப்புள்ளது என்று சீன ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

## குளிர் பானங்களால் ஆபத்து!


சோடா பானங்களை பருகுவதால் உடம்பு எடை கூடுவதுடன், டைப்-2 எனப்படும் நீரழிவு நோய் ஆபத்தும் அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

தினந்தோறும் ஒரு சோடா, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சோடா பானங்களை குடிக்காத பெண்களுடன் ஒப்பிடும் போது, இவற்றை குடிக்கும் பெண்களுக்கு 4 ஆண்டு காலத்திற்குள் டைப் 2-எனப்படும் குறிப்பிட்ட நீரிழிவு வருவதற்கு 2 மடங்கு கூடுதல் வாய்ப்பு உள்ளது.

உடல் எடை மற்றும் நீரிழிவு ஆகியவற்றுக்கான மற்றைய காரணங்களுடன் ஒப்பிடும் போது சோடா பானங்களை மிக முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆகையால் வெல்லம் கலந்த சோடா பானங்களை கூடுமானவரை தவிர்க்க முயற்சிப்பது டைப்-2 நீரிழிவு, உடல் பருமனிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளும் சிறந்த வழி ஆகும்.

உடல் எடை கூடினால் அதைத் தொடர்ந்து நீரிழிவு. இதய ரத்த நாளம் சம்பந்தப்பட்ட நோய்கள் வரிசையாக வரும் என்பது குறிப்பிடத்தக்கது.



## அரிய விலங்கினம்



ஜேர்மனியிலுள்ள மெக்டபர்க் மிருகக்காட்சிச்சாலையில் "ஜர்போவா" என்றழைக்கப் படும் விலங்குகள் 15 வாழ்கின்றன. இவ் விலங்குகள் அரிதாகக் காணப்படும் ஓரினமாகும். இங்கு காணப்படும் அவ்வகை விலங்கு ஒன்றின் குட்டியின் இரு காதுகளும் வழமைக்கு மாறாக நீண்டதாகக் காணப்படுவதால் இவை பற்றிய ஆய்வுகள் நடைபெறுவதாக கூறப்படுகின்றது.

## 'நெப்போலியனை' காக்க முயற்சி

'நெப்போலியன்' என்றழைக்கப் படும் இவ்வகை மீன்கள் கொங் கொங் கடற்பரப்பில் காணப் படுவதாகவும் இவை தற்போது குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நீலம், பச்சை நிறங்களைக் கொண்டதான இம்மீனினம் மனிதர்களின் கவனமின்மையாலேயே அழிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவை மிகவும் சுவையுள்ளவையாகவும் கூடிய பெறுமதி கொண்டவை என்றும் கூறப்படுகிறது.



இவற்றைப் பாதுகாக்கப் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருப் பினும் செயல்வடிவம் பெறவில்லை. இந்த மீனினத்தை உணவிலிருந்து நீக்கிவிடுதலே இதற்கான வழியாகும். இவை இரண்டு மீற்றர் நீளம் உடையவை. இவை முற்றாக அழியுமாயின் அந்தத்தவறு மனிதனையே சேரும்.

## நினைவுப் பூக்கள்

# மேஜர் ராஜன்

[மரியநேசன் அன்றூமாட்டின் (நோபேட்)]
விக்ரர் கவச எதிர்ப்பு அணி
இம்ரான் பாண்டியன் படையணி

| | | |
|---|---|---|
| தாயின் மடியில் | :– | 25–02–1975 |
| தாயக மண்ணில் | :– | 26–06–1999 |

தலைவன் வழியில் தமிழினத்திற்காய்
தன்னுயிர் ஈந்த எம் அருமை ராஜனே
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் மனம்
அகலவில்லை நின் எழில்வதனம்.

வயாவிளான் கிழக்கு,
வயாவிளான்

குடும்பத்தினர்.



(9865)

# பதவி வெற்றிடம்

## கிளி/ மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம் (வது) கிளிநொச்சி

### கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு 18-45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. களஞ்சியப்பொறுப்பாளர்: 202/13 பதவி வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம் : 31/99 (அமைவாக) $\frac{4000 - 5550}{75\times 10 \quad 80\times 10} + 1250$

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவுப்பணியாளரின் 14ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணம்) பத்திரம்/க.பொ.த. (சாதாரணம்) தரத்தில் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம்/சிங்கள, தமிழ் பாசை என்பனவற்றில் 04 திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

02. காவலாளி : 315/17 பதவிவெற்றிடம்:01
சம்பள அளவுத்திட்டம் : 31/99 (அமைவாக) $\frac{3000 - 4150}{55\times 10 \quad 60\times 10} + 1250$

அங்கீகரிக்கப்பட்ட தகைஸ்மகள்:

(அ) 05ஆம் வகுப்புக்கல்வித் தராதரப்பத்திரமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

03. அலுவலக வேலை உதவியாளர் : 317/17 பதவிவெற்றிடம்:01
சம்பள அளவுத்திட்டம் : 31/99 (அமைவாக) $\frac{3000 - 4150}{55\times 10 \quad 60\times 10} + 1250$

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
(அ) 08ஆம் வகுப்பு கல்வித்தராதரப் பத்திரம்

04. தொழிலாளி : 318/17 பதவி வெற்றிடம்:01
சம்பள அளவுத்திட்டம் : 31/99 (அமைவாக) $\frac{3000 - 4150}{55\times 10 \quad 60\times 10} + 1250$

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) 05ஆம் வகுப்புக் கல்வித்தராதரமும், நல்ல தேகாரோக்கியமும்

குறிப்பு: கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, அ. அ. இல, கல்வித் தகைமைகள், தொழில் அனுபவம், சான்றிதழ், நற்சான்றுப்பத்திரங்கள் ஆகியவை அடங்கிய சுயவிபரங்களுடன் 05. 07. 2004ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியதாக மேற்படி சங்க முகவரிக்குஅனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்,
கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்.
செல்வாநகர், கிளிநொச்சி.

(சி9861)

# தேறாங்கண்டல் அ.த.க பாடசாலையில் பொருத்தியிருந்த சோலர் திருட்டு

(மல்லாவி)

தேறாங்கண்டல் அ.த.க பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த சோலர் கடந்த 21ஆம் திகதி இரவு திருடப்பட்டுள்ளது. கடந்த சனவரி மாதம் துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறையினரால் இப்பாடசாலைக்கு மாணவர்களின் நலன் கருதி இரவு கல்விகற்றலுக்காக அன்பளிப்பு செய்த சோலரே திருடப்பட்டுள்ளது.இதன் பெறுமதி 20,000 ரூபாய்க்கு மேல் எனத் தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார். இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக துணுக்காய் காவல் பணிமனையினர் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (24)

துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்கம்
துணுக்காய்

## களஞ்சிய முகாமையாளர் பயிலுநர் ஆட்சேர்ப்பு

முல்லைத்தீவு மேற்குப் பிரிவில் 10 வருடங்களுக்கு மேலாக நிரந்தரமாக வசிக்கும் 18-45 வயதிற்கு இடைப்பட்ட ஆண்பாலாரிடமிருந்து களஞ்சிய முகாமையாளர் பயிலுநர்களாக நாளொன்றிற்கு 125/-இற்கு மேற்படாதபடி சம்பளம் வழங்கக் கூடியதாக தற்காலிக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தை சுயமாகத் தயாரித்து 15.07.2004ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாகவோ தலைவர், துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கம், துணுக்காய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


| | |
|---|---|
| பதவி | : களஞ்சிய முகாமையாளர் (பயிலுநர் தற்காலிகம்) |
| குறியீட்டு இலக்கம் | : 208/14 |
| கல்வித் தகைமை | : க.பொ.த.சாதாரண தரத்தில் இரு அமர்விற்கு மேற் படாமல் கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். |

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப்பயிற்சிநெறியில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தலைவர்,
துணுக்காய், பகுதி, ப. நோ. கூ. சங்கம்,
துணுக்காய்.

(சி-9864)

## காணவில்லை



# பாக்கியநாதர் றெஜினோல்ட்

பாக்கியநாதர் றெஜினோல்ட் ஆகிய இவரை அவரது பெற்றோர் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இவரைக் கண்டு பிடி[illegible] தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படு[illegible]

தொடர்புக்கு : T.P. 0777-222204

நேரில் :
பா. டொறின் (டீச்சர்)
பாலிநகர் மகாவித்தியாலயம்,
துணுக்காய்.

(4741)

# வெடிபொருட்கள் பற்றிய தெளிவு அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள உதவும்

**அ.லோகீசன்**

யாழ்.குடாநாட்டில் இப்போது வெடிபொருட்களின் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது. ஆனாலும் எமது நோக்கம் வெடிபொருட்களின் தாக்கத்தால் ஒருவர் கூட பாதிக்கப்படக்கூடாது என்பதுதான். இந்நிலை உருவாக வேண்டுமானால் மக்கள் வெடிபொருட்கள் பற்றி அதிக விடயங்களை அறிவதன் மூலமும் இவ்வாறு அறிந்த விடயங்களில் தெளிவடைவதன்மூலமும் வெடிபொருட்களை அகற்றும் பணிக்கு இடையூறு விளைவிக்காது அவர்களுக்கு பூரண ஆதரவு வழங்குவதன் மூலமும் தான் வெடிபொருட்களினால் ஏற்படும் தாக்கத்தை யாழ் குடாநாட்டில் பூச்சியமட்டத்தக்கு கொண்டுவர முடியும் என தற்போது வடகிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கண்ணிவெடி விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ். மாவட்ட மிதிவெடி அபாயக் கல்வி, விழிப்புணர்வுத் திட்ட உதவியாளர் ச.சிவநேசசிங்கன் ஈழநாதம் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

*** அதிக பகுதிகள் வெடிபொருள் அபாயம் மிக்க பகுதியாகக் காணப்படுகிறது. இவற்றை எவ்வாறு கண்ணிவெடியகற்றல் செயற்பாடுகளுக்கு முன்னுரிமைப் படுத்துகிறீர்கள்?**



ஆம் எம்மிடம் மக்கள் தினமும் பல்வேறுபட்ட பகுதிகளில் உள்ள வெடிபொருட்களை அகற்றுமாறு கோருகின்றனர். மக்களால் கோரப்படுகின்ற பகுதிகள் அனைத்திலும் வெடிபொருட்களை அகற்றக் கூடிய ஆட்பலம் எம்மிடம் இல்லை. இதனால் நாம் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் இருந்து முன்னுரிமைப்படுத்தப்பட்ட இடங்களில் ஐந்து இடங்களை தெரிவு செய்து தரும்படி கோரியிருக்கிறோம். அவர்களினால் தரப்பட்ட இடங்களை முன்னுரிமைப் படுத்தியே வெடிபொருள் அகற்றும் வேலைகளை மேற்கொண்டு வருகிறோம். ஆனால் அனைத்து இடங்களிலும் வெடிபொருள் அகற்றப்படும்.

*** கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கும் காலப் பகுதியை இப்போது தெரிவு செய்தமைக்கான காரணம் என்ன?**

எம்மிடமுள்ள தரவுகளின் படி வருடத்தின் மூன்றாவது காலாண்டில் தான் அதிகளவு விபத்துக்கள் நடைபெற்றுள்ளது. அதாவது ஆடி, ஆவணி, புரட்டாதி ஆகிய மாதங்களில் தான் அதிகம் விபத்துக்கள் நடைபெற்றிருக்கிறன. அதனால்தான் மிதிவெடி அபாயக் கல்வி வாரம் மூன்றாம் காலாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் கடைப் பிடிக்கப்படுகிறது.

*** யாழ். குடாநாடு முழுவதும் எத்தனை சதுர மீற்றர் பரப்பில் வெடிபொருட்கள் உள்ளன?**

1995ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் இன்று வரையான காலப்பகுதி வரை யாழ் குடாநாட்டில் பல்வேறு பகுகிகளிலுமாக ஏறத்தாள 11மில்லியன் சதுரமீற்றர் வெடிபொருட்கள் புதைக்கபட்டிருந்த பிரதேசமாக இனங்காணப்பட்டிருக்கிறது. இதில் இதுவரை இரண்டு மில்லியன் சதுரமீற்றர் நிலப்பரப்பில் வெடிபொருள் அகற்றப்பட்டுள்ளது.

அகற்றப்படாத ஏனைய பகுதிகள் அனைத்திலும் வரும் 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் அகற்றிமுடிப்பதற்கான திட்டமொன்றை தந்திருக்கிறார்கள் யாழ். குடா நாட்டில் இரண்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் செயற்படுகின்றன. அதாவது 'கலோரஸ்,' 'டனிஃப்' கண்ணிவெடி அகற்றும் பிரிவு, நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவை இரண்டும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

அரசினுடைய இந்தத்திட்டம் தற்போது உள்ள சூழ்நிலையில் தான் வகுக்கப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்புப் பகுதிகளில் உள்ள வெடிபொருட்கள் இத்திட்டத்தின்படி அகற்றப்படமாட்டாது. உயர் பாதுகாப்பு வலயத்தின் வெளியே உள்ள பகுதிகள் தான் அரசு சமர்ப்பித்த 2006ஆம் ஆண்டிற்குள் வெடிபொருட்களை அகற்றி முடிக்கின்ற திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

மேலதிகமாக பாதுகாப்புவலயங்கள் உள் நகர்ந்து செல்கின்றபோது குறித்தகாலப்பகுதிக்கான காலக்கெடு விரிவடைந்து செல்லும். தற்போதுள்ள வெடிபொருள் நிலங்களில் வெடிபொருள் அகற்றுவதற்கே மேற்குறித்த காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

*** அரசின் திட்டப்படி 2006ஆம் ஆண்டுக்கிடையில் வெடி பொருட்களைஅகற்றிவிட முடியும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?**

இது சிந்திக்கவேண்டிய கேள்வி. மிதிவெடி அகற்றுபவர்கள் குறித்த காலத்தில் அகற்றமுடியுமென உறுதியளிக்கிறார்கள். அதனால் நாம் அதனை ஒரு பிரச்சினையான விடயமாக கருதவில்லை. ஏனெனில் வெடிபொருட்களை அகற்றும் நுட்பங்கள் அறிந்தவர்கள் அவர்கள் தான். ஆகவே அவர்கள் அதனை அகற்றமுடியும் என்கிறார்கள்.

*** யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அபாயம் நிறைந்த பகுதியாக நீங்கள் கருதும் இடங்கள் எவை?**

யாழ்.குடாநாட்டில் வெடிபொருள அச்சுறுத்தல் அதிகம் உள்ள இடங்களாகப் பல பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் கோப்பாய், தெல்லிப் பளை, தென்மராட்சி, நல்லூர், அரியாலை ஆகிய பகுதிகளும், யாழ்ப்பாணத்தில் இராணுவம் இரண்டு மண் அணைகள் அமைந்த பகுதிகளும் அச்சுறுத்தல் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒன்று கொழும்புத்துறையிலிருந்து கோப்பாய் வழியாக செல்கிறது. அடுத்தது நாவாந்துறையில் ஆரம்பித்து சுன்னாகம் ஊடாகச் செல்கிறது. இந்த இரண்டு மண் அணைகளிலும் அதிகவெடி பொருட்கள் புதைக்கப்பட்டிருக்கிறது. இவை மிகவும் ஆபத்து நிறைந்த பகுதிகளாக இனங்காணப் பட்டிருக்கிறன. எனவே மக்கள் அபாய எச்சரிக்கைகள் குறிக்கப் பட்ட பகுதிகளில் செல்வதைத் தவிர்க்கவேண்டும்.

*** வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் எவ்வாறு இருக்கின்றது?**

யாழ்.குடாவில் வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மூன்று நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அவை சர்வோதயா,

(11ஆம் பக்கம் பார்க்க)

# சமூகவிரோதச் செயல்களுக்கே போதைப் பொருள் பாவனை இட்டுச்செல்லும்

போதைப் பொருள் பாவனையானது இன்று உலகில் ஏற்படுகின்ற அனைத்து தீய செயல்களுக்கும் அடிப்படையாக அமைவதைக் காண முடிகிறது. நம்நாட்டைப் பொறுத்தவரையில் போதைப பொருள் பாவனையின் நாளாந்த அதிகரிப்பானது பல்வேறு சமூக சீர்கேடுகளுக்கும் கொலை, கொள்ளை பாலியல் குற்றங்கள் போன்ற தீய செயல்கள் தினமும் அதிகரிப்பதற்கு வழி வகுத்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.



பொதுவாக போதைப் பொருள் பாவனைக்கான ஆரம்ப நிகழ்வாக நிகழ்வதுதான் புகைபிடிக்கும் பழக்கமாகும். எவரொருவர் புகைக்க ஆரம்பிக்கிறாரோ அவரது அடுத்த கட்டம் போதை வஸ்துப் பாவனையே.

இன்று எமது பிரதேசத்தை பொறுத்தவரை பாடசாலை மாணவர்களிடையே புகைத்தல் என்பது ஒரு கலாசார பழக்க வழக்கம் போல வளர்ந்து கொண்டே போகின்றது. புகைத்தலில் ஆரம்பித்து அது நாளடைவில் போதை பாவனைக்கு அவர்களை உயர்த்தி விடுகின்றது.

இன்று அமெரிக்காவிலுள்ள 70 சதவீதமான சிறுவர்கள் சிறுவயதிலேயே புகைபிடிக்கத் தொடங்குகின்றார்கள். இவர்கள் சராசரி நாளொன்றுக்கு 10 சிகரட் வரை புகைத்து வருகின்றார்கள்.

இன்று இந்தப் போதைக்கு அடிமைப்பட்டவர்களின் தொகை பல மில்லியன்களைத் தாண்டி விட்ட நிலையில் போதைப் பொருள பாவனை, கடத்தல் என்பன தடை செய்யப்பட வேண்டும் என்ற நிலைக்கு உலக நாடுகள் வந்துள்ளன.

அரசாங்கமும், பல்வேறு அமைப்புக்களும் பல்வேறு இறுக்கமான சட்டங்களை ஏற்படுத்திய போதிலும் போதைப் பொருள் நமது நாட்டினுள் ஊடுருவிக் கொண்டே இருக்கின்றது.

போதைப் பொருள்களில் பல வகையான போதைப் பொருள்கள் இருக்கின்றன. அதில் அபின் வகையைச் சேர்ந்த ஹெரோயின் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்தே நம் நாட்டிற்கு வருகின்றது. இதனை அடிக்கடி உபயோகிக்கும் ஒருவர் இது இல்லாமல் இருக்கமாட்டார். அந்த அளவுக்கு அடிமையாக்கி விடும். அதுமாத்திரமல்ல ஒரு விலை உயர்ந்த போதை வஸ்தும் கூட. இதைப் பாவிப்பவர் எதிலும் பெரிதாக ஈடுபாடு காட்ட மாட்டார். தனிமையைப் பெரிதும் விரும்புவதுடன் உணர்வற்ற ஒரு நிலையில் காணப்படுவார். இந்த அபின் என்ற போதைப் பொருள் உலகில் தங்கப்பிறை நாடுகள் என அழைப்பப்படும். பாகிஸ்தான் ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பர்மா, லாவோஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

## இன்று சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம்

அபின் பொப்பி எனும் தாவரத்தின் வித்துறையிலிருந்து பெறப் படும் கட்டியான சாறாகும். இதனை மூலப் பொருளாகக் கொண்டு மோர்பின், ஹெரோயின் போன்றவை தயாரிக்கப்படுகிறது. அபின் பல நூற்றாண்டு காலமாக ஒரு மருந்தாகவும் பொழுதுபோக்குப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் இன்று அதைவிட சிறப்பான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டதால் கைவிடப்பட்டது.

அபின் உட்கொண்டதும் அது மன இறுக்கத்தைக் குறைக்கும் என அதைப்பாவிப்போர் நினைக்கும் போதும் அது தீர்மானிக்கும் திறனைப் பலவீனப்படுத்தும், ஒரு தற்காலிக அதிபரவச உணர்வை ஏற்படுத்தினாலும் அது இலகுவில் அடிமைநிலையையும் ஏற்படுத்தும், மறதி, பசியின்மையினை உண்டு பண்ணுவதோடு மனிதப் பண்புகளையும் குறைக்கும் தன்மை கொண்டது. அபினின் இரசாயன இயல்புகளை கொண்டிருக்கும் இதற்கு மூலப்பொருளாக பெற்றோலியப் பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன.

ஒருவர் அவருடைய சுய சுகாதாரத்திற்கு அல்லது சமுதாயத்திற்கு தீங்குகளை விளைவிக்கக் கூடிய வகையில் போதைப் பொருளைப் பாவிப்பதனால் அவரின் நல்வாழ்வு அழிவதுடன் சமூகமும் பாதிப்படைகிறது. வைத்தியத் துறையில் ஏற்புடைய ஒரு வழியில் போதைப் பொருள்கள் சில பயன்படுத்தப்படுகின்றது. இருந்தும் சரியான வைத்தியப் பராமரிப்பு முறையில் உபயோகிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு மருந்தாக எற்றுக் கொள்ளப்பட்ட போதைப் பொருட்களை சட்ட விரோதமாகப் பாவிப்பதாலும் சமூகம் பின்வரும் பாதிப்புக்களை எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

போதைப் பொருள் பாவிப்பவரை மக்கள் வெறுப்பதுடன் சரியாக மதியாத காரணத்தினால் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு சமூக அந்தஸ்து இழந்து குடும்பம் சீரழிகிறது.

போதைப் பொருள் ஆளுமை, சுயகௌரவம், சுயசிந்தனை என்பவற்றை இழக்கச் செய்யும். இதனால் அவரது மட்டுமல்ல அவரின் பிள்ளைகள், குடும்பத்தினர், சமூகத்தில் மதிப்பற்றவர்களாகக் கருதப்படுவார்கள். போதைப் பொருள் பாவிப்பதால் ஏற்படும் சுயசிந்தனையற்ற செயல்களினால் சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. தொடர்ந்து போதைப்பொருள் பாவிப்பவர்கள் பணம் இல்லாத காரணத்தினால் கொள்ளை, களவு போன்ற வழிகளில், பணத்தினைப் பெற முயற்சிக்கின்றனர்.

இன்று விளையாட்டு வீரர்கள் சில வேளைகளில் போதைப் பொருள் பாவிப்பதனால் விளையாட்டிலிருந்து அவர்கள் நீக்கப்பட வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. எத்துறையில் இன்று போதைப் பொருள் ஆதிக்கம் செலுத்துகின்றது. இன்று இந்தப் போதை பாவனைக்கு பல பெண்கள் அடிமைகளாகி சிந்தனை அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எத்தனையோ பேர் இன்று கூட சிறைக் கைதிகளாக சிறைகளிலே வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் பலர் சிறுவர்களே 15 வயது முதல் 20 வயது வரையான சிறுவர்கள், இளைஞர்கள் சிறைவாசம் வாழ்ந்து வருகின்றார்கள் இன்று இவர்கள் வாழ்க்கை நிலை கேள்விக்குறியாக உள்ளது.

போதைப் பொருள் உற்பத்தி விற்பனை என்பது எமது நாட்டில் தடை செய்யப்பட்டிருக்கும் இதே வேளை பலநாடுகளில் போதைப் பொருள் உற்பத்தி செய்தல், போதை பொருள் விற்றல் போதைப் பொருள் வைத்திருத்தல் என்பனவற்றிற்கு மரணதண்டனை விதிக்கும் சட்டமும் கொண்டு வரப் பட்டுள்ளது.

இவ்வாறான ஆட்கொல்லி நோயானபோதை வஸ்துப் பாவனையிலிருந்து எமது இளைய தலைமுறையினரை எவ்வாறு மீட்சிப்பாதைக்கு இட்டுச் செல்லலாம் என்பதைப் பற்றிச் சிந்திப்பது இத்தருணத்தில் எல்லோருக்கும் முன் உள்ள சவாலாகும். இந்தப் போதை வாழ்விலிருந்து உலகம் விடுபடவேண்டும்.

**பிரதீபன்**

யாழ்ப்பாணம்



## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.
"ஆஅவ" கடன் இல.1846-SRI (SF)

# கேள்வி அறிவித்தல் 30

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (நிகொட்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக, கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | AM/NECORD/IR/02 | அம்பாறை கஞ்சிகுடிச்சாறு புனரமைப்பு - தொகுதி 6 | M7 | 37,000/= |
| 02 | AM/NECORD/IR/02 | அம்பாறை கஞ்சிகுடிச்சாறு புனரமைப்பு - தொகுதி 7 | M7 | 37,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ்மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெ[illegible]ட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும், இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முடி[illegible]ரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

VI. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழுங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434. தொலைநகரி 026-2227401 மின்னஞ்சல் necord@sltnet.lk)

06. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஆனி 25 இருந்து 2004 ஆடி 8 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

07. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

08. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 ஆடி 14 முற்பகல் 2.00 மணிக்கு முன்பாக கிடைக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே ஒப்பந்தக்கூட்டமொன்று 2004 ஆடி 8 முற்பகல் 11.30இக்கு NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலையில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாகமாட்டார்.

திரு.த.லங்காநேசன்,
கேள்விச்சபைத் தலைவர்,
NECORD, 140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

(சி-9866)

# தமிழீழ காவல்துறையின் ஒழுங்குபடுத்தலில்

# பாடசாலை மாணவர் வீதி ஒழுங்கு நடவடிக்கை

**தமிழீழ காவல்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் பாடசாலை மாணவர்கள் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் நேரங்களில் அவர்கள் இத்தகைய கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

தமிழீழ காவல்துறையால் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், உடையார்கட்டு மகாவித்தியாலயம், வள்ளிபுனம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனையடுத்து மாணவர்கள் காவல்துறையுடன் இணைந்து பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களிலும், முடிவடையும் நேரங்களிலும் வீதி ஒழுங்குக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்தும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், கொக்குளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம், கைவேலி கணேசா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு காவல்துறையால் வீதி ஒழுங்கு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏனைய பாடசாலைகளுக்கும் பயிற்சிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீதியொழுங்குகள் குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் அப்பணிகளில் ஈடுபடுத்தப்படுவதானது மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிறப்பான நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

## கருத்தூட்டல் வகுப்பு

(புதுக்குடியிருப்பு)

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான கருத்தூட்டல் வகுப்பும், நாற்றுமேடை தயாரித்தல் தொடர்பான விளக்கக்கருத்தரங்கும் கடந்த புதனன்று முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் அதன் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (08)

## முல்லைத்தீவு நகரப் பகுதியில் இயந்திரம் மூலம் மிதிவெடி அகற்றல்

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கான அலுவலகம், பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகம் ஆகிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ள காணியில் மிதிவெடிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கண்ணிவெடி அகற்றும்பணி மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் நடைமுறைப்படுததப்பட்டு வந்தது.

ஆனால் இக்கட்டடங்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டிய தேவை இருப்பதால் முல்லை. மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக மிதிவெடி அகற்றும் இயந்திரம் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் தருவிக்கப்பட்டு புதன் கிழமை முதல் துப்புரவாக்கும் பணி துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

ஒரு வாரத்தினுள் தாம் மிதிவெடி அகற்றும் பணியினை நிறைவு செய்து தருவதாக மனித நேயக்கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (20)

## காலாவதியான பொருட்கள் புதுக்குடியிருப்பில் அழிப்பு

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் கடந்த செவ்வாயன்று உணவு கையாளும் நிலையங்கள் தமிழீழ சுகாதார சேவையினராலும் பொது சுகாதாரப் பரிசோதகரினாலும் ஆய்விற்குட்படுத்தப்பட்டது.

இதன் போது காலாவதியான பிஸ்கற், ஜாம், ரின்பால், மீன்ரின் ஆகிய பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன. மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி ஏறக்குறைய 40000 ஆகும் என தமிழீழ சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். (19)

## கால்வாய் நோயின் தாக்கத்தையடுத்து தமிழீழ சுகாதார சேவை ஆலோசனை

தற்போது எமது பகுதிகளில் மாடுகளுக்கான கால்வாய் நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இந் நோயின் தாக்கம் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிகளில் காணப்படுகிறது. இக்கால்வாய் நோய் தொடர்பாக தமிழீழ சுகாதாரசேவையினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இது ஒரு வைரஸ் நோயாகும். காற்றினூடாகப் பரவக் கூடிய தாகையால் விரைந்து தொற்றக் கூடியது. இந்நோய் வந்த மாடுகளின் பால், இறைச்சி என்பன மனித நுகர்விற்குப் பயன்படுத்தும் போது மனிதனுக்கும் தொற்றக் கூடியது. கால்நடை வளர்ப்பிடங்களின் சுகாதாரமின்மையே இது தொற்றுவதற்கும், பரவுவதற்கு சாதகமான காரணியாக உள்ளது.

**நோய்க்கான அறிகுறி**

நாக்கு, வாயைச் சுற்றிய பகுதிகள் குரை இடைவெளிகள் என்பனவற்றில் கொப்புளங்கள் தோன்றி இவை உடைந்து புண்ணாக மாறும். இரை வெட்டாது. குரை இடைவெளிகளில் கொப்புளங்கள், புண்கள் காணப்படுவதால் நடக்கக்கஷ்டப்படும். நாக்கு, வாயைச் சுற்றிய பகுதிகளில் கொப்புளங்கள், புண்கள் காணப்படுவதால் துர்நாற்றம் காணப்படும். காய்ச்சல் காணப்படும்.

**மனித நுகர்விற்கான பால், இறைச்சி விற்பனையாளர்களின் கவனத்திற்கு,**

மேற்படி அறிகுறியுடன் கூடிய மாட்டின் பால், இறைச்சி என்பன மனித நுகர்விற்கு விற்பனை செய்தலாகாது. நோய் பரவும் பிரதேசங்களில் மாடுகள் வெட்டும்போது பிரதேச பொது சுகாதார பரிசோதகர்/மிருகவைத்திய உத்தியோகத்தர்/தமிழீழ சுகாதார சேவைகள் பிரதேச இணைப்பாளர் ஆகியோரின் உடல் பரிசோதனையின் பின்பே மாடு வெட்டப்பட வேண்டும். வேகமாக நோய் பரவி வரும் இடங்களிலிருந்து வேறு இடத்திற்கு மாடுகளைக் கொண்டு செல்வதை நிறுத்துதல் வேண்டும். நோய்த்தாக்கமுள்ள மாடுகளின் இறைச்சி, பால் பதனிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளலாகாது.

## முல்லை. கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் திறப்பு

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத் திறப்பு விழா கடந்த திங்களன்று பிரதேச செயலர் காசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை கடற்புலிகளின் அரச திணைக்களம் சார் பொறுப்பாளர் சிலம்பரசன் , பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், து.வி.ஜெயக்குலராஜா, கட்டடத்திணைக்கள பொறியியலாளர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் பொன்நிலா ஏற்றி வைத்தார்.

கரைதுறைப்பற்று பிரதேச கொடியினை பிரதேச செயலர் காசிப்பிள்ளை ஏற்றினார். பிரதேச செயலகப் பெயர்ப்பலகையினை முல்லை.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் திரை நீக்கம் செய்துவைத்தார்.

அலுவலகக் கட்டடத்தினை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்துவைத்தார்.

மாநாட்டு மண்டபத்தினை முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஆசியுரையினை முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் நிகழ்த்தினார்.

## கஞ்சா அழிப்பு

(மன்னார்)

மன்னார் பேசாலையில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொட்டலங்கள் பேசாலைப் பகுதியில் பொதுமக்கள் மத்தியில் வைத்து எரிக்கப்பட்டன. பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த கஞ்சாவினை எடுத்துச் செல்வோரும், கடத்தல்காரரும் இனங்காணப்பட்டு அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். தற்சமயம் மன்னார் பேசாலை கிராமத்தில் இவ்வாறான போதைப் பொருட்கள் தரைமார்க்கமாக கடத்தப்படுகிறது எனத் தெரிய வருகின்றது. (மி)

## கால்நடைகளுக்கான தடுப்பு மருந்து பெற்றுவர சென்றோர் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பல்!

### ஆறு வீத மருந்துகளே வழங்கப்பட்டன

(ஒட்டுசுட்டான்)

வன்னிப் பெரு நிலப்பரப்பில் வேகமாகப் பரவிவரும் கால்வாய் நோயினைக் கட்டுப்படுத்தத் தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கான தடுப்பு மருந்துகள் எடுத்து வருவதில் பெரும் முட்டுக்கட்டை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நோயிற்கான தடுப்பு மருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் செயலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனை பெற்றுக்கொள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள கால்நடை வைத்திய பிரிவினர் தென்னிலங்கை சென்றபோது பெரும் ஏமாற்றத்துடன் மிகக் குறைந்தளவு மருந்துகளுடனேயே திரும்பி வந்துள்ளனர்.

பத்தாயிரம் மாடுகளுக்கு தடுப்பு மருந்து தேவைப்பட்டபோதிலும் அறுநூறு மாடுகளுக்கே இரு மாவட்டங்களுக்கும் சேர்த்து மருந்து வந்துள்ளது. இதை வைத்து என்ன செய்வது என கால்நடை வைத்தியர்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த இம்மருந்துகள் தாராளமாக உள்ளபோதிலும் தென்னிலங்கையில் உள்ள துவேசம்மிக்க அதிகாரிகள் தென்னிலங்கைக்கு மட்டும் வந்துள்ளது வடபகுதிக்கு இல்லை என திருப்பி அனுப்பிவிட்டனர். இச்செய்தியைக் கேட்ட கால்நடைப் பண்ணையாளர்கள் பெரும் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர். பொருளாதாரத் தடை நீக்கப்பட்டபோதும் வன்னிப் பகுதி மக்களுக்கு இவ்வாறான செயற்பாடுகள் தொடந்த வண்ணமே உள்ளன. (05)

## எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட எண்மர் மட்டக்களப்பில் இனங்காணல்

### விசேட மாநாட்டில் தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட எட்டுப் பேரை தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் இனங்கண்டுள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்தும் விசேட மாநாடு கடந்த செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச அதிபர் எஸ். புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து வெளியிடுகையில்.

இம் மாவட்டத்தில் எட்டுட பேரின் குருதியில் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயின் பிற பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இத் தொகை 10 வருடங்களின் பின் 80 ஆக அதிகரிக்கலாம் எனவும் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் விபரத்தினை தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்புப் பிரிவு பேணி வருகின்றது எனவும், இவர்கள் ஐந்து அல்லது ஆறு வருடங்களில் மரணித்து விடுவார்கள் எனவும் தெரிவித் துள்ளார். எயிட்ஸ் நோய் இலங்கை யில் 1999ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆ[illegible] வரை 7500 பேர[illegible] பாத[illegible]ளது. இதில் 15 வ[illegible]து முதல் 49 வயது வரையுள்ளவர்களே அதிகம்.

இலங்கையில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 2210 பெண்களும் 200 குழந் தைகளும் அடங்குவர். 1999 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 490 பேர் உயிரிழந்துள்ளனர் என பாலியல் நோய் தடுப்புப் பிரிவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எயிட்ஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கு உலக வங்கி நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நோயின் பாதிப்பைக் கட்டுப்படுத்த ஒரு தடுப்புக் குழுவும் அரச அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளது.

## 'உருவங்கள் மாறலாம்' தெருவெளி நாடகம்

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரத்தையொட்டி யுனிசெப், வெண்புறா நிறுவனங்களின் அனுசரணையுடன் மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தின் விடுதலைக் கலைஞர்களின் 'உருவங்கள் மாறலாம்' என்னும் தெருவெளி நாடகம் தற்போது கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றது.

பொன்னாலை கண்ணதாசன் உருவாக்கத்திலான இந்நாடகத்தில் அவதானமற்ற செயற்பாடுகளால் ஏற்படும் கண்ணிவெடி, மிதிவெடி மரணங்களை தடுப்பதற்கான வழிவகைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. சென்ற புதன் கோணாவில் அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் இந்நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. (கா)

## யூரோ கிண்ண கால்பந்து கால்இறுதிப்போட்டி -2004

# பலமான இங்கிலாந்து போர்த்துக்கல்லிடம் அதிர்ச்சித்தோல்வி

# கால் இறுதியை இழந்தது ஜேர்மன்;நெதர்லாந்துக்கு கால் இறுதி வாய்ப்பு

சர்வதேச கால்பந்தாட்ட அரங்கில் பலம் வாய்ந்த இங்கிலாந்து அணி மற்றுமொரு அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளது.




2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பிரேசில் அணியிடம் தோல்வியைத் தழுவிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் மற்றுமொரு அதிர்ச்சித் தோல்வியைத்தழுவியது.

யூரோ கிண்ணத்துக்கான கால் பந்துத் தொடரில் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் அணிக்கு எதிரான கால் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி தண்ட உதை மூலம் 6-5 என்ற கோல் எண்ணிக்கையில் தோல்வியைத் தழுவியது.

பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இப்போட்டியின் மூன்றாவது நிமிடத்தில் மைக்கல் ஓவன் அபாரமான கோல் ஒன்றை அடித்து இங்கிலாந்து அணியை முன்னிலையில் நிறுத்தினார்.

இதனை அடுத்து சொந்த நாட்டு ரசிகர்களின் ஆரவாரத்துக்கு மத்தியில் வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற உறுதியோடு விளையாடிய போர்த்துக்கல் வீரர்கள் போட்டியின் 83 ஆவது நிமிடத்தில் பொஸ்டிகா அடித்த அலாதியான



கோல் மூலம் கோல் எண்ணிக்கையைச் சமன் செய்தது. தமது அணியை அரையிறுதிக்கு அழைத்துச் செல்லும் பாதையைத் திறந்தார்.

இதனால் இங்கிலாந்து அணியின் அரையிறுதிக்கு நுழையும் வாய்ப்பில் தடை ஏற்பட்டதுடன் அதுவே அதன் வெளியேற் றத்திற்கும் காரணமானது.

போட்டியின் உத்தியோகபூர்வ நேர முடிவின் போது இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்ததை அடுத்து மேலதிக நேரம் வழங்கப்பட்டது.



மேலதிக நேரத்தின் போதும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தன. இந்நிலையில் மேலதிக நேரம் முடியும் போதும் இரு அணிகளும் 2-2 என்ற கோல்கள் வீதம் சமநிலையில் இருந்தன.

இதனை அடுத்து தண்ட உதை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் 6-5 என்ற கோல் எண்ணிக்கையில் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவானது. இதனால் இங்கிலாந்து அணி வீரர்கள் சர்வதேச கால் பந்தாட்ட அரங்கில் மற்றுமொரு சோகத்தை எதிர்கொண்டு போட்டித் தொடரில் இருந்து வெளியேறினர்.

இதில் இங்கிலாந்து அணித் தலைவர் பெக்காம் அடித்த முதலாவது தண்ட உதைகம் பத்துக்கு மேலால் சென்றமை தோல்விக்குக் காரணமாக அமைந்தது. பிரான்சுக்கு எதிரான முதலாவது போட்டியிலும் பெக்காம் இது போன்ற தவறை இழைத்தார்.

இதேவேளை யூரோ கிண்ண கால்ந்தாட்டப் போட்டிகளில் இருந்து பலமான ஜேர்மன் அணி கடந்த புதன் கிழமை நடைபெற்ற தகுதி காண் போட்டியில் செக்குடியரசிடம் அடைந்த தோல்வியை அடுத்து வெளியேற்றப்பட்டது.

செக்குடியரசு அணிக்கும் ஜேர்மன் அணிக்கும் இடையிலான போட்டி போர்த்துக்கல்லின் லிஸ்



பன் நகரில் நடைபெற்றது.

யூரோ கிண்ணப் போட்டித் தொடரின் கால் இறுதிப் போட்டிக்கு ஏற்கனவே தகுதிபெற்ற நிலையிலேயே செக்குடியரசு இரு போட்டியில் கலந்துகொண்டது.

இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் தமது திறமையை வெளிப்படுத்திய ஜேர்மன் அணி 21 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் போட்டது. ஜேர்மனியின் நிக்காயல்பல்லக் கோலைப் போட்டார்.

எனினும் போட்டியின் 30 ஆவது நிமிடத்தில் செக்குடியரசிற்கான முதலாவது கோலை மராக்கே போட்டு கோல் எண்ணிக்கையைச் சமன் செய்தார். இதனையடுத்து போட்டியின் 77அவது நிமிடத்தில் நிலான்பரோட் வெற்றிக் கோலை அடித்து செக்குடியரசு அணிக்கு அபார வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்.

இதன் மூலம் D க்குழுவில் விளையாடிய மூன்று போட்டிகளிலும் செக்குடியரசு வெற்றி பெற்று 9 புள்ளிகளுடன் இறுதிப் போட்டியில் வலுவான ஓர் அணியாக கால் இறுதிப்போட்டிக்கு விளையாடவுள்ளது.

இத்னால் ஐரோப்பிய கிண்ணத்தை மூன்று தடவை சுவீகரித்த ஜேர்மன்அணி தகுதிகாண் போட்டியுடன் வெளியேறியமை அந்நாட்டு ரசிகர்களை அதிர்ச்சிக்



குள்ளாக்கியுள்ளதுடன் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டிகளில் தமது அணியை மேலும் தயார்படுத்த வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் இத்தோல்வி அணியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்து நெதர்லாந்து அணிக்கும் லத்வியா அணிக்கும் இடையிலான மற்றுமொரு Dக்குழு போட்டி போர்த்துக்கல்லின் றாஹா நகரில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் 27 ஆவது நிமிடத்தில் நிக்கல்டோ நெதர்லாந்து அணிக்கு பனால்டி மூலமாக முதலாவது கோலை பெற்றுக கொடுத்தார்.



இதனையடுத்து 35 வது நிமிடத்தில் நிக்கல்டோ இரண்டாவது கோலையும் போட்டு நெதர்லாந்துக்கு வலுச்சேர்த்தார். இதன் மூலம் ஆட்டத்தின் முதல்பாதி நிறைவின் போது நெதர்லாந்து 2-0 என்ற நிலையில் முன்னிலை வகித்தது.

போட்டியின் 84 ஆவது நிமிடத்தில் றோய் மைக்கல் நெதர்லாந்து அணிக்கான மூன்றாவது




கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இந்த வெற்றியை அடுத்து யூரோகிண்ண போட்டியின் இறுதி கால் இறுதிக்கான வாய்ப்பை நெதர்லாந்து அணி தனதாக்கியது.

மேற்படி வெற்றிகள் மூலம் நெதர்லாந்தை எதிர்த்து சுவீடனும், செக்குடியரசைஎதிர்த்து டென்மார்க் அணியும் அடுத்த கால் இறுதிப் போட்டிகளில் மோதுகின்றன.



பியூனஸ் எயர்சில் உள்ள பொகாயூனியஸ் விளையாட்டரங்கில் ஆஜன்ரீனா கால்ந்தாட்ட வீர் மரபோனா பிரியாவிடைப் போட்டியின் பின் தன் ரசிகர்களிடமிருந்து விடை பெறும்போது.



செக் குடியரசு அணி ஜேர்மன் அணியைத் தோற்கடித்ததைத் தொடர்ந்து தனது பதவியை ராஜி னாமாச செய்த ஜேர்மன் நாட்டுப் பயிற்றுனர் ரூடிவொல்லர்.

## விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டி

# முன்னணி வீரர்கள் மூன்றாம் சுற்றுக்குத் தகுதி

# வீனஸ் அதிர்ச்சித் தோல்வி; மாட்டினாவும் வெளியேறினார்

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் விளையாட நடப்பு சம்பியன் ரோஜர் பெரடர் தகுதிபெற்றுள்ளார்.

ஆண்கள் தரப்படுத்தலில் முதலிடம் வகிக்கும் நடப்பு சம்பியன் ரோஜர்பெரடர் கொலம்பிய வீரர் அலெக்ஸ்சாண்டர் காலாவுடனான போட்டியில் நேர்செட்களில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார்.

இதேவேளை 2000,2001 ஆம் ஆண்டுகளிலும் விம்பிள்டன் சம்பியன் பட்டம் வென்ற அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லயம் குரோஷிய வீராங்கனை கரோலினா- ஸ்பேமுடனான போட்டியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.இதனால் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறும்



அவரது வாய்ப்பு நழுவிப்போனது டென்னிஸ் தரப்படுத்தலில் வீனஸ் வில்லியம் மூன்றாம் இடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

பரபரப்பான இப்போட்டியில் கரோ லினா ஸ்பேம் 7-6,7-6 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்றார்.

இது இவ்வாறிருக்க ஒன்பது முறை விம்பிள்டன் பட்டம் வென்ற மூத்த வீராங்கனை மாட்டினா நவரத்தினலோவா இரண்டாவது சுற்றில் தோல்வி அடைந்து போட்டிகளில் இருந்து வெளியேறினார்.

இதனைவிட ஆடவருக்கான இரண்டாவது சுற்றுப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் லெவிட்டன் ஹெவிட்னி ஸ்பெயினின் ஹர்லஸ் மேயா, குரோஷியாவின் இவானிசேவிச் ஆகியோர் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

## கால்இறுதிப்போட்டியில் பெக்காம்
















இங்கிலாந்துக்கு முதல் கோல் போட்ட ஓவன் மகிழ்ச்சியில்.



போர்த்துக்கல் கோல்காப்பாளர் ரூட்வான நிஸ்ல்ரூய் பயிற் சியின் போது



## சிந்தனைக்கு

வீழ்ந்தவர்கள் எல்லாம் விதையாகிப் போனதால் தான் விடுதலைப் போர் இன்றும் தொடர்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-06-2004



மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


## மங்களசமரவீரவின் ஒப்புதல!

மட்டக்களப்பில் இருந்து தப்பியோடுவதற்கும், கொழும்பில் பாதுகாப பாக இருப்பதற்கும் சிறிலங்கா இராணுவத்தில் ஒரு தரப்பினர் உதவியது உண்மையே என சிறிலங்காவின் தகவல் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றை அளித் துள்ளார். இதில், சிறிலங்கா இராணுவம் கருணாவிற்கு உதவியது என்பது முக்கி யமானதல்ல. அதனை அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புக் கொண்டதே முக்கியமானதாகும்.

ஏனெனில், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முன்னாள் தளபதியாக இருந்த ஒரு சிலர் உட்பட சுமார் ஒரு டசின் வரையி லானவர்கள் கொழும்பிற்குள் பகிரங்கமாகப் பிரவேசிப்பதென்பதும், அங்கு பாதுகாப்பாக இருப்பதென்பதும் சாத்தியப்பாடான தொன்றல்ல. அதுவும், கருணா மட்டக்களப்பில் இருந்து தப்பியோடும் நிலை உருவாகிவிட்டதென்ற நிலை வெளிப்பட்டுவிட்ட நிலையில் சிறிலங்கா இராணுவ உதவியின்றி அவர்கள் தற்துணிவுடன் பாதுகாப பாகப் பயணம் செய்வதென்பதோ அன்றி கொழும்பில் தங்கியிருப்ப தென்பதோ சாத்தியப்பாடானதொன்றல்ல.

முதலில், ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா கருணா தப்பியோட உதவினார் என்ற தகவல் வெளி வந்ததும் ஆளும் கட்சியினருக்குவேறும் வாய்க்கு அவல்போல் அது இருந்தது. ஆனால், கொழும்பு வந்த கருணா எங்கிருக்கின்றார்? யார் பாதுகாப்பில் உள்ளார் என்ற கேள்விகளுக்குப் பதில்கள் வெளிவரத் தொடங்கியதும் ஆளும் கட்சிக்குப் பெரும் நிர்ப்பந்தம் ஒன்று எழுந்தது.

ஏனெனில், கொழும்புவந்தகருணாஇராணுவப் புலனாய் வுத்துறையின் பாதுகாப்பில் உள்ளார் என்ற தகவல் வெளி வந்தபின்னரும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் சிறுபிள்ளைத்தனமாகக் கூறுவதுபோன்று எங்களுக்கொன்றும் தெரியாது எனக் கூறிகொண்டிருக்க முடியாது. கருணா கொழும்பிற்கு எவ்வாறு வந்தார்? யார் பாதுகாப்பில் உள்ளார்? என்பதைக் கூறாது விட்டால் நாட்டின் பாதுகாப்பு என்பதே கேள்விக்குள்ளாகிவிட்டது எனப் பெரும் எதிர்ப்புக் குரல் அரசிற்கு எதிராக எழுவது தவிர்க்க முடியாத தாகிவிடும். அத்தோடு, சிறிலங்கா புலனாய்வுத்துறை மற்றும் படைத் தரப்பினருக்கும் அவமானமாகிவிடும்.

இதனால், கருணா அரசின் பாதுகாப்பில் தான் உள்ளார் என்ற தகவலைஅமைச்சர் மங்கள சமரவீர கூறவேண்டியதாயிற்று. ஆனால், கருணாவிற்கு சிறிலங்கா அரசு பாதுகாப்பு அளிப்பதும், அவரின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பதும், சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கும், யுத்த நிறுத்தத்திற்கும் எதிராக அரசு செயற் படுவதாகக் குற்றச்சாட்டெழும் என்ற நிலையிலேயே, இராணுவத் தரப்பின் ஒரு பிரிவினர் இவ்வாறு நடந்து கொண்டிருக்கலாம் என விவகாரத்தை திசைதிருப்பிவிட அமைச்சர் முனைந்துள்ளார்.

சிறிலங்கா ஆயுதப் படையைச் சார்ந்த அனைவரும் உதவி னார்களா? அன்றி ஒரு தரப்பினர் உதவினாரா? என்பது இங்கு முக்கியத்துவமானதல்ல. சிறிலங்கா இராணுவம் உதவியது என்பதே முக்கிய மானதாகும். இதில் மங்கள சமரவீரவின் ஒரு தரப்பு என்ற வாதம் அர்த்தமற்றது.

ஏனெனில், இராணுவத்தில் ஒருதரப்பு உதவினால் என்ன? அதில் ஒருவர் உதவினால் என்ன? இராணுவம் உதவியது என்பதே அதன் முடிவு. அதிலும் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய விடயத்தில் இராணுவத்தின் ஒரு தரப்பு உதவியது எனக் கூறி ஆட்சியில் உள்ள உயர்மட்டத்தினைப் பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்ள முற்படுவதானது கற்றுக்குட்டித்தனமாகும். அவ்வாறு ஒருதரப்பே உதவுவதானால், இது அரசாங்கத்திற்குள் அரசாங்கம் ஒன்று நடப்பது போன்றதாக அல்லது அரசாங்கத்திற்குள் ஒரு தரப்பு தனித்தியங்குவதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும்.

அத்தோடு, அரசாங்கம் தற்பொழுது கூறுவது போன்று தன்னிச் சையாக ஒரு சில இராணுவ அதிகாரிகள் செயற்பட்டிருக்கலாம் என்ற கூற்று ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கருணாவின் விவகாரத்தில் தற்துணிவாக, ஒரு அதிகாரியோ அன்றி சில அதிகாரிகளோ எதனையும் ,மேற்க்கொள்ளமாட்டர்கள் ஏனெனில். இதனால், விளையக்கூடிய ஆபத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளாது இருக்கமுடியாது. அதாவது, அரசு சமா தானத்திற்கு விசுவாசமாக இருப்பின் அதிகாரிகள் யுத்தத்திற்கு ஆதரவாகச் செயற்படுவது அதிகாரிகளின் எதிர்காலத்தையே கேள்விக குள்ளாக்கத்தக்கதாகும்.

ஆகையினால், தற்பொழுது கருணாவிற்கு வழங்கிய வழித துணைக்கும் கொழும்பில் வழங்கப்படும் பாதுகாப்பிற்கும் சனாதிபதி சந்திரிகாவே பதில் அளிக்க வேண்டியவராவார். ஏனெனில், சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சராகவும், முப்படைத் தளபதி யாகவும் அவரே உள்ளார். பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் சிறில் ஹேரத் கூறியது போன்று இதற்கு அமைச்சர் தான் பதில் கூறவேண்டும் என சனாதிபதி சந்திரிகாவும் கூறிவிடமுடியாது. ஏனெனில், அவர் பாதுகாப்பு அமைச்சர் மட்டுமல்ல, அமைச்சர வையின் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் உள்ளார்.

யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் போன்றவற்றில் சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள். அவர் களின் அணுகுமுறை எவ்வாறானதாக இருக்கும் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாததொன்றல்ல. ஆனால், யுத்த நிறுத்தத்திலும், சமாதான முயற்சிகளிலும் புலிகள் பற்றுறுதியாக இருப்பது, யுத்தத் தினால் ஏற்பட்டபாதிப்புக்களை உணர்ந்தாவது திருந்த மாட்டார்களா? என்ற எதிர்பார்க்கையினாலேயே. ஆனால், அவர்கள் இன்னமும் நான் நித்திரை செய்கிறேன் எனக் கூறிக் கொண்டிரு பவர்களாகவேஉள்ளனர்.

# மூன்று மாதங்களில் அரசாங்கத்தால் மக்கள் எவ்வித நன்மையும் அடையவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி செய்த கடந்த மூன்றுமாதங்களில் நாடும், மக்களும் எவ்வித நன்மையும் அடையவில்லையென எதிர்க் கட்சித்தலைவர் ரணில் கூறி யுள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற மோதல்களினால் பாராளு மன்றத்தின் கௌரவம் பாதிக்கப் பட்டுள்ளதென அவர் மேலும் தெரி வித்துள்ளார். மாத்தறையில் நேற்றுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அவர்தொடர்ந்து கருத்துத் தெரி விக்கையில், எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் இத்தகைய சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு சகல எதிர்க்கட்சிகளும் இணைந் துள்ளதாக தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் பெரும் பான்மையைக் கொண்டுள்ள எதிர்க் கட்சி மீது மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# கட்டாக்காலி நாய்களைப் பிடித்தோர் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவால் மிரட்டல்

(கொழும்பு)

கட்டாக்காலி நாய்கள் பிடித்த கொழும்பு மாநகரசபை ஊழியர் கள் துப்பாக்கி முனையில் மிரட்டப் பட்டதுடன் இவர்கள் பிடித்த நாய் களும் விடுவிக்கப்பட்டன.

சென்ற வியாழன் வெளி நாட்டமைச்சை அண்டிய பகுதி யில் மேற்படிதொழிலாளர்கள் கட்டாக்காலி நாய்களைப் பிடித்துக் கொண்டிருந்த போது கைத்துப் பாக்கிகளுடன் அங்கு வந்த சிலர் தொழிலாளர்களை அச்சுறுத் தியதுடன் பிடித்த நாய்களை விடு விக்குமாறும் வற்புறுத்தியும் உள்ளனர்.சனாதிபதி பாதுகாப்புப் பிரி வைச் சேர்ந்தவர்களே துப்பாக் கியுடன் வந்து அச்சுறுத்தியவர் கள் என ஆங்கில நாளதழ் செய் திக்குறிப்பொன்று கூறி யுள்ளது.

# அமெ.சிறிலங்கா முதலீட்டுச் செயற்பாட்டு உடன்படிக்கையைத் தொடர இணக்கம்

அமெரிக்காவிற்கும் இலங்கைக் குமிடையேவர்த்தக மற்றும் முதலீட்டு செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த அமெரிக்கா இணங்கியுள்ளது.இவ்உடன்படிக்கை இலங்கையில் எதிர்கால அபிவிருத் திக்குப் பாரியளவில் பங் களிக்குமென அமைச்சர் ஜெயராஜ் பெனாண்டோபுள்ளே நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளைமேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; அரசாங்கத்து டனும் பிரதமருடனும்கைச் சாத் திட்ட இவ்உடன்படிக்கை தொடர்ந்து நடைமுறையில் இருக்குமெனவும். அமெரிக்க வர்த்தகஅமைச்சர் கூறியுள்ளாரென தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

சமாதான முன்னெடுப்பும் சவால்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கும் கலந்துரையாடலும் இன்று காலை திருகோணமலை நகரமண்டபத்தில் சமூகஅபி விருத்தி ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட இருக்கின்றது. சமா தான முன்னெடுப்பின் பின் அரசி யல் சவால்கள் என்ற தலைப்பில் அ.ஜோதிலிங்கம், நிரந்தர சமாதா னத்தை நோக்கிய பயணத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைஎன்ற தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் உதயதென்னக்கூன் ஆகியோரும் பேசுவர். (25)

# பேருந்துக் கட்டணங்களை உயர்த்தாவிடின் போராட்டம்

(கொழும்பு)

பேருந்து கட்டணத்தை அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு இடையில் அதிகரிக்காவிட்டால் நாடுதழுவிய பேருந்து நிறுத்தப் போராட்டம் நடத்தப் போவதாக தனியார் பேருந்து ஊழியர்சங்கம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்துள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களுக்குப்பின் எண்ணெய் விலையை அதிகரிக்கப்போவதாக வந்த வதந்திகளுக்குப்பின் இத்தீர்மானத்தை தனியார் பேருந்து நிறுவன ஊழியர்சங்கம் எடுத்துள்ளது. பேருந்து டயர் மற்றும் உதிரிப்பாகங்கள் எண்ணெய் விலைகள் அதிகரித்துள்ளதாகவும் இச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# அக்மீமன தேரர் மீதான தடைஉத்தரவு நீடிப்பு


ஜாதிகஹெல உறுமயவினைச் சேர்ந்த அக்மீமன தயாரட்ன தேரர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்வதை தடுக்கும்நோக்கில் சமர்ப்பிக் கப்பட்டிருந்த தடைஉத்தரவு எதிர் வரும் 29 ஆம் திகதி வரை நீடிக் கப்பட்டுள்ளது.

இத்தடைஉத்தரவு நேற்று கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தினால் விதிக்கப் பட்டுள்ளது. ஹெலஉறுமய சார்பில் ஆஜரான சட்டத் தரணிகள் இவ்வாறான தடை உத்தரவை பிறப்பிப்பதற்குமாவட்ட நீதிமன்றத்திற்கு சட்டஉரிமை இல்லையென சுட்டிக்காட்டி யுள்ளார். (32)

# சமாதானம் ஏற்பட்டாலே சிறி.வில் பொருளாதாரவளர்ச்சி ஏற்படும்

## சிங்கப்பூர் பிரதமர் தெரிவிப்பு

சிங்கப்பூர் ஏனைய நாடுகளுடன் வர்த்தக உறவுகளை உரிய முறையில் செயற்படுத்தியமையின் காரணமாகவே இன்று அந்த நாடு சிறந்த பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுள்ளது.சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இது ஒரு உதாரணமாகும். அதேநேரம் நாட்டில் சமாதானம் ஏற்படும் போதே அவ்வாறான பொருளாதார வளர்ச்சியை சிறிலங்காவால் எதிர்பார்க்கமுடியும் என சிங்கப்பூர் பிரதமர் தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற வர்த்தகப் பிரமுகர்களுடனான சந்திப்பின் போது இந்தக்கருத்தை அவர் வெளியிட்டார். தமது சிறிலங்காவுக்கான விஜயத்தின் நோக்கம் தெற்காசியாவில் வர்த்தக உறவுகளை விருத்தி செய்வதாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். சிறிலங்காவில் சமாதான சூழ்நிலை ஏற்படும் போதே முதலீடுகளில் அதிகரிப்பு ஏற்படும் எனக் கூறிய அவர் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புக்கள சிறிலங்காவில் சமாதானத்தை கொண்டுவரஉதவும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். (32)




## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உப பிடிபாடுகளாகச் சிக்கி இறக்கும் சிறிய திமிங்கிலங்கள்,டொல்பின்கள்மற்றும் கடற்பன்றிகள் எண்ணிக்கை மட்டுமே ஆண்டுக்கு 300,000க்கும் அதிகம் ஆகும்

# படையினரின்கெடுபிடியால் பாடசாலை கட்டடவேலைகள் தாமதம்!

(வடமராட்சி)

படையினரது கெடுபிடிகளால் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் இடம் பெற்று வரும் பாடசாலை அபிவிருத்திப்பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலைக்கட்டட வேலைகளைமேற்கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களே இப்படையினின் கெடுபிடிகளால் அல்லலுறுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

பருத்தித்துறை அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பவற்றின் கட்டட நிர்மாணப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. கடந்த கால யுத்தநடவடிக்கைகளால் இப்பாடசாலைக்கட்டடங்களில் பெரும் பாலானவை அழிந்துபோயுள்ளன.

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம் பெறும் கட்டடநிர்மாணப் பணிகளுக்கென சென்ற தொழிலாளர்கள் கடந்த வியாழனன்று படையினரின் சோதனைச்சாவடியில் வைத்து தடுக்கப்பட்டனர். அளவுக்கதிகமாக பணியாளர்கள் வந்திருப்பதாக கூறி கல்லூரி வீதியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் அவர்கள் நீண்ட நேரமாகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதையடுத்து கட்டட ஒப்பந்தக்காரர், பாடசாலை அதிபர் இதனை படை உயரதிகாரிகளது கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து மதியத்தின் பின்னரே வேலைத்தளங்களிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அன்றையதினத்தின் வேலைகளும் தாமதமாகவே ஆரம்பமாகியுள்ளன. (27)

# ஐ.தே.க.வும், பொ.ஐ.முன்னணியும் இயல்பில் மாற்றமில்லாத கட்சிகள்

## முஸ்லிம் காங். தலைவர் ஹக்கீம் கூறுகிறார்

ஐக்கியதேசியகட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் இயல்பில் மாற்றமில்லாத கட்சிகளென முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் நட்பு ரீதியாகவும் சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க எதிர்ப்பான ரீதியாகவும் முஸ்லிம்களுக்கும் மற்றும் முஸ்லிம் காங்கிரசிற்கும்துரோகம் செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாகாணசபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

எதிர்கால சமாதான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பு தனித் தரப்பாக பங்கு பற்ற வேண் டும் என்பதில் சனாதிபதியும், ரணி லும் அலட்சியப் போக்கையே கடைப் பிடித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார். (33)

# சுகாதார ஊழியர் போராட்டத்தை ஜே.வி.பி. காட்டிக் கொடுத்து விட்டது

## சுகாதார ஊழியர் சம்மேளன அமைப்பாளர்

அரச வைத்தியர்கள் உள்ளிட்ட ஏனைய சுகாதார ஊழியர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை ஜே.வி.பி.யினர் அரசாங்கத்திற்கு காட்டிக்கொடுத்து விட்டனர். எனப் போராட்டத்திற்குத் தலைமைதாங்கி வரும் சுகாதார ஊழியர் சம்மேளன அமைப்பாளர் குமுதேஸ் அறிவித்துள்ளார்.

ஜே.வி.பி தொழிற்சங்கம் ரணிலின் அரசைக்கவிழ்ப்பதற்கு போராட்டங்களை நடத்தினார்களே தவிர சுகாதார ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு போராட்டங்களை நடத்தவில்லை.

இப்போது ஜே.வி.பி.யின் இரட்டைவேடம் நன்றாகப் புரிகிறது என குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

# சந்திவெளியில் தொழிலாளி கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்தி வெளியில் தொழிலாளி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த இச் சம்பவத்தின் போது சின்னத்தம்பி தியாகராசா என்பவரே கொல் லப்பட்டவராவார்.

கூலித்தகராறு காரணமாக இவர்மீது கல்வீச்சு நடைபெற்றதாகவும் இதனால் காயமடைந்தவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற சமயம் அவர் அங்கு மரணமானதாகவும் தெரிய வருகின்றது.

**-இலங்கை வங்கியில் பயிற்சியாளராக-**

# சேவை புரிந்த பட்டதாரிகள் தொடர் ஆர்ப்பாட்டம்!

இலங்கை வங்கியில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பயிற்சியாளராகச் சேவையாற்றி வந்த பட்ட தாரிகள் நேற்று முன்தினத்திலிருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தாம் இதுவரை காலமாக இலங்கை வங்கிக் கிளைகளில் சேவையாற்றிய போதிலும் தற்போது தம்மைப் பணிகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை ஆட்சேபித்து இவ்ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர். கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் முன் நடைபெறுகின்ற போராட்டத்தில் சுமார் 296பேர் கலந்து கொண்டுள்ளனர். இவர்களில் வடகிழக்கைச் சேர்ந்த 20இற்கும் மேற்பட்டோர் காணப்பட்டனர். (32)

# நாவற்குடாவில் ஒருவர் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்குடாவில் காணித்தகராறுகாரணமாக ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது நாவற்குடா மாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் இராஜசிங்கம் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மேற்படி மரணமானவரை கடந்த மூன்று நாட்களாகக் காணவில்லையென உறவினர்கள் காத்தான்குடிப்பொலிசாரிடம் முறைப்பாடு செய்திருந்தவேளை நேற்று முன்தினம் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து அந்தக் கிணற்றை பார்த்தபோது பசளைப்பை ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் சடலம் காணப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க...

கையேற்றுக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் கரையோரப் பாதுகாப்பிற்கான கட்டளையிடும் அதிகாரி இக்கப்பலைக் கையளித்துள்ளார். இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளில் இது மற்றுமோர் முக்கிய நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டக்ளஸ்...

கருணாவுடன் தான் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்ததாக டக்ளஸ் தேவானந்தா வெளிப்படையாகத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

## வவு....

முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பிரசன்னமாகிய துணைவேந்தரின் பிரதிநிதிகளும் மாணவர் சார்பில் வந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவரும் மாணவர்களுடன் கலந்துரையாடினர். அவ்வேளையில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் அவர்களும் பிரசன்னமாகியிருந்தார். அவ்வேளை துணைவேந்தரின் பிரதிநிதிகள் மாணவர்களின் கோரிக்கைகளுக்கு உறுதிமொழிகள் என்று கூறி சில கருத்துக்களைத் தெரிவித்தனர். ஆனால் மாணவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். துணைவேந்தர் நேரடியாக வரவேண்டுமென கோஷமிட்டனர். உடனே பாராளுமன்ற உறுப்பினர் துணைவேந்தருடன் தொடர்புகொண்டபோது துணைவேந்தர் எதிர்வரும் திங்கள் தான் வவுனியாவிற்கு வரமுடியும் எனக் கூறினார். உடனடியாக மாணவர்கள் பல்கலைக்கழக பிரதிநிதிகள் வந்த வாகனத்தை முற்றுகையிட்டு துணைவேந்தர் வந்தால் மட்டுமே வாகனத்தை விடுவதாகக் கோஷமிட்டனர். அவ்வேளை மீண்டும் துணைவேந்தருடன் தொடர்புகொண்டபோது இன்றைய தினமே உடனடியாகப் புறப்பட்டு வருவதாகப் பாராளுமன்ற உறுப்பினருக்கு கூறியதால் அவரின் உறுதிமொழியை ஏற்று பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (32,21)

## பாராளுமன்ற...

இதற்கிடையில் தமது அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (32)

## பட்டிருப்பு....

திற்கு வெளியே வீழ்ந்து வெடித்தமையால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைக்குண்டுவீச்சு சிறிலங்காவின் விஷேட அதிரடிப் படையினரின் பின்னணியின்றி நடைபெற்றிருக்கமுடியாதென மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சுகாதாரசேவை ஊழியர் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

சுகாதார சேவையினர் எதிர்வரும் 29 ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக எச்சரித்துள்ளனர். தமது சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும் எனக்கோரி கடந்த வாரம் அவர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர், எனினும் அமைச்சின் உரிய தீர்வு இல்லாமையினால் தாம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பயன்படுத்தி தமக்கான சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும் என்பதே சுகாதார சேவையினரின் கோரிக்கையாகும். (32)

# தண்ணீர் தாங்கியுள் வீழ்ந்து குழந்தை பரிதாப மரணம்

வாழைச்சேனை கண்ணகிபுரத்தில் இரண்டு வயதுக் குழந்தை நேற்றுமுன்தினம் பி.ப. 4 மணியளவில் பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கியினுள் விழுந்து பரிதாப மரணமடைந்துள்ளது.

திலகன் அபிசக் எனும் குழந்தையே இவ்வாறு மரணமடைந்ததாகும். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:- வீட்டில் பெற்றோர் இல்லாத வேளை குழந்தை தண்ணீர் எடுப்பதற்காக தண்ணீர்த் தாங்கி அருகில் சென்று நீர் எடுக்க முயன்ற வேளையில் தாங்கியினுள் விழுந்துள்ளது. அச்சமயம் அங்கு வந்த பெற்றோர் குழந்தையை தாங்கியிலிருந்து மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளையில் குழந்தை இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது குழந்தை நீரில் மூழ்கிய வேளை மூச்சுத் திணறி இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மிருசுவில் அம்மன் ஆலய திருவிழாவில் குழப்பம்

வடக்கு மிருசுவிலில் கொட்டகை அம்மன் ஆலய மூன்றாவது திருவிழாவான நேற்று ஒரு தரப்பினர் நடத்திக்கொண்டிருந்த அன்னதான நிகழ்வை இன்னொரு தரப்பைச் சேர்ந்த சிலர் இடைமறித்து பிரச்சினையைக் கிளப்பியதால் அன்னதான நிகழ்வு நடுவில் நிறுத்தப்பட்டது அரிசி, காய்கறிகள் வெந்துகொண்டிருந்த கிடாரங்கள் அரைகுறையாக இறைக்கிவைக்கப்பட்டன. மற்றும் சமையல் பொருட்கள் கொட்டப்பட்டதால் திருவிழாவை நடத்திக்கொண்டிருந்த தரப்பினர் பெரும் பதட்டம் அடைந்தனர். விரதம் இருந்த நூற்றுக்கணக்கான மக்கள் பெரும் துயரம் அடைந்துள்ளனர். இச்சம்பவம் சமூக முரண்பாடு காரணமாக நடைபெற்றுள்ளது. (28)

# கருணாவின் பெயரில் கப்பம் கோரி மிரட்டல்

கருணாவின் குழுவைச் சேர்ந்தவர்கள்எனக் கூறி பயணிகள் விடுதிகளில்சிலர் கப்பம்கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் பயணிகள் விடுதி வைத்திருக்கும் இருவர். தம்மிடம் வந்த இளைஞர்கள் சிலர்வந்து தாங்கள் கருணாவின் அணியைச் சேர்ந்தவர்களெனக் கூறி தமக்கு பணம் தேவைப்படுவதாகக் கூறி பணம் தருமாறு மிரட்டியதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் இது போன்ற பணவசூலிப்புச் சம்பவங்கள் பரவலாக நடைபெறுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொ.ஐ.முன்னணி வேட்பாளரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊவா மாகாணசபை வேட்பாளர் விஜய முனிசொய்ஷாவைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு வெல்லவாய நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு இவரின் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை ஊவா மாகாணப் பொலிசார் கைப்பற்றினர் இதனைத்தொடர்ந்து குறிப்பிட்ட வேட்பாளர் நேற்று மெதகம பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியைச் அச்சுறுத்தியுள்ளார். இதன்போது பொலிஸ் நிலையத்தில் மாகாண சபைக்கான தபால் மூல வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் இச்சம்பவங்களைப் பொலிசார் வெல்லவாய நீதிமன்றத்திடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து நீதவான் இவரைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (32)

## பொது....

தாகவும் அவரது செயல் பிழையானது எனத் தாம் கூறியதுடன் இது தொடர்பாகத் தம்மைச் சந்தித்து அதற்கான விளக்கத்தைத் தரவேண்டுமெனக் கேட்டதாகவும் இதுவரை அலிசாஹிர் மௌலானா எந்தவித பதிலையும் தரவில்லையெனவும் விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை கடந்த வருடம் கருணாவின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் மலேசியாவிற்குச் செல்ல அலிசாஹிர் மௌலானாவே உதவியதாகவும் விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். கருணாவின் மனைவி பிள்ளைகள் கொழும்பிலுள்ள அலிசாஹிர் மௌலானாவின் வீட்டிலேயே தங்கி இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கின்...

கடைப்பிடித்து வருவதாகவும் கிழக்கில் தற்போது நிலைமை இலகுவானதாக இல்லை எனக் கூறும் அவர், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அரசுடனான அனைத்துச் சந்திப்புக்களையும் விடுதலைப்புலிகள் நிறுத்தி உள்ளதனால் அங்கு நிலைமை கடினமாக உள்ளதாகவும், விடுதலைப்புலிகள் மனதை மாற்றவேண்டுமெனவும் இருதரப்பினருக்குமிடையில் மீண்டும் சுமுகநிலையை ஏற்படுத்துவதில் தாங்கள் வெற்றிபெறுவோம் எனத் தாங்கள் எண்ணுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 26.ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.